WESLEY HIGH SCHOOL

UTMOST FOR THE HIGHEST

# உரைகள்

## க. பொ. த (சா/த)

## மாணவர் தின விழா - 2019




**உவெஸ்லி உயர்தர பாடசாலை,**

**கல்முனை.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உவெஸ்லி உயர்தர பாடசாலை
கல்முனை.

# உரைகல்

க. பொ. த (சா/த)

மாணவர் தின விழா –2019

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உவெஸ்லி உயர்தர பாடசாலை,
# கல்முனை.

**க. பொ. த (சா/த) மாணவர் தின விழா –2019**

காலம்
**09 - 11- 2019 முற்பகல் 9.30 மணி**

இடம்
**நல்லதம்பி மண்டபம்**

தலைமை
**திரு. செ. கலையரசன்**
(கல்லூரி அதிபர்)

பிரதம அதிதிகள்
**ஜனாப். எம். எஸ். அப்துல் ஜலீல்**
வலயக்கல்விப் பணிப்பாளர்,
வலயக் கல்வி அலுவலகம் - கல்முனை.

**திரு. க. பாக்கியராசா**
திட்டமிடல் பணிப்பாளர்,
மாவட்ட செயலகம் - அம்பாறை

கௌரவ அதிதிகள்
**திரு. எஸ். உதயகுமார்**
திட்டமிடல் உதவிப் பணிப்பாளர்,
பிரதேச செயலகம் - ஆலயடிவேம்பு

**திரு. பே. ராஜகுலேந்திரன்**
திட்டமிடல் உதவிப் பணிப்பாளர்,
பிரதேச செயலகம் - கல்முனை வடக்கு

சிறப்பு அதிதிகள்
**திரு. எஸ். சரவணமுத்து**
கோட்டக் கல்விப் பணிப்பாளர்,
கோட்டக் கல்வி அலுவலகம் - கல்முனை தமிழ்

**திரு. வ. பிரபாகரன்**
ஓய்வு நிலை அதிபர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலைக் கீதம்

எந்தையே உம் ஊழியர்
எழுப்பிய கூடம்
உந்தயையாலே பாலர்
உற்றார் ஆசி கிரீடம்
பந்த சித்தியாம் கிருபை
பாதை தன்னில் காணும்
இந்த நேரம் அன்னாரோ
டேத்துவோமும் நாமம்

ஓய்வு அற்று மாறியே
ஓடும் மோன ஆண்டு
தேய்வற்ற புது முக
தோழர் தந்த தீண்டு
மாய்வு தோன்றமறந்தார்
மன்னுந் திடம் பயம்
ஓய்ந்தாலும் மாறா உம்மோ
டொன்றாகிச் சிறந்தார்

நற்றானி யத்தை முன்னோர்
நட்டார் நாம் அறுக்க
பெற்றுப் பின்னோர் விளைவை
பண்ட(க)சாலை சேர்ப்பார்
அற்றை நாள் தரும் பாடம்
உத்தம சேவையாம்
முற்றாய் உயர்ச்சிக்கே எம்
முழு நோக் கன்றாடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# MOTTO

Utmost for the Highest

அதி உயர்ச்சிக்கான பரிபூரண முயற்சி

# VISION

Quality Education, the key to Success
of Future Generation

தரமான கல்வி எதிர்கால சந்ததியின்
வெற்றிக்கான திறவுகோல்

# MISSION

"Pave the way towards inculcation innovation
Skills and enhancing Social Economic
Development among Students, to become
Useful and Patriotic Citizens in keeping with
National Education Policy"

"எதிர்கால சவால்களுக்கு முகம் கொடுக்கக்
கூடியவாறு சமூக பொருளாதார அபிவிருத்தியை
மேம்படுத்துவதற்கு மாணவர்களைத் தேசிய
கல்விக் கொள்கைக்கு ஏற்ப நாட்டுப்பற்றுள்ள
புத்தாக்க திறன்மிக்க, பயன்மிக்க
பிரஜைகளாக திகழ வழிசெய்து கொடுத்தல்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# க.பொ.த (சா/த) வரவேற்புக் கீதம்

அன்பு நிறைந்த பள்ளியிலே
என்றும் கல்வி பெருகுமே
பள்ளிக்கதிபர் பணியேற்ற
அதிபர் திலகம் வாழ்கவே!

கல்வியென்ற பாதை தன்னை
கருத்திற் கொண்ட எமது கண்கள்
ஆசான் என்ற பணியேற்ற
அன்பு உள்ளங்கள் வாழ்கவே!



பகுதித் தலைவர் பணியிலே
பார்த்து எம்மை வளர்த்திட்ட
பெருமைக்குரிய ஆசான்கள்
என்றும் சிறப்புடன் வாழ்கவே!

வருகை தந்த பிரதம அதிதிகளே
வாய்மை கொண்ட அறிஞர்களே
உங்கள் வரவால் எங்கள் இதயம்
(இன்பம் பெருகுதே!)

உவெஸ்லி பள்ளி முற்றத்திலே
ஆலமரத் தென்றல் தடவிடவே
சுற்றித் திரிந்த மாணவரே
பத்தொடு ஒன்றாம் தரத்தினிலே
பண்பாய்ப் பரீட்சை எழுதிடுவோம்.!

பெருமைக்குரிய மாணவரே
பண்பு நிறைந்த கரங்களினால்
பள்ளிப் பெருமை காத்திடுவோம்
உவெஸ்லி பள்ளி வாழ்கவே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிச் செய்தி

உலகின் கல்வித்துறையானது நவீன மாற்றங்களின் மூலமாக பல்வேறு பரிமாணங்களைக் கொண்டு வளர்ச்சியடைந்து வருகிறது. எனினும் மாணவர்களின் அறிவாற்றலை அளவிடுவதற்கு ஏதோ ஒரு வகையில் பரீட்சை இன்றியமையாததாகிவிடுகிறது. இந்த வகையில் பாடசாலைக் கல்வித்திட்டத்தில் க.பொ.த சாதாரண தரப்பரீட்சையும் முக்கியமானதாகின்றது. 136 வருடகாலமாக காத்திரமான கல்விச் சேவையாற்றிவரும் எமது பாடசாலையில் இவ்வருடம் க.பொ.த (சா/தர) பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களால் நடாத்தப்படும் O/L தின விழாவும் அதனோடு இணைந்ததாக வருடாவருடம் வெளியிடப்படும் "உரைகல்" சஞ்சிகைக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மகிழ்வடைகின்றேன்.

அன்பான பெற்றோர்களே உங்கள் பிள்ளைகளிடம் கல்வியின் அவசியம் பற்றி அடிக்கடி கூறுங்கள். கற்பதற்காக அதிக வாய்ப்புக்களை ஏற்படுத்துங்கள். பொருத்தமற்ற சூழல்களைச் சுட்டிக்காட்டுங்கள், சரி,பிழை எது என்பதையும், நல்லது,கெட்டது எதுவென்பதையும் பற்றிக் கலந்துரையாடுங்கள். ஆசிரியர்களே உங்களிடம் ஒப்படைக்கப்பட்ட மாணவர்களுக்கு கல்வியையும்,நற்பழக்கவழக்கங்களையும் ஊட்டி வழிகாட்டுங்கள். அப்போது அவர்கள் சிறப்படைவார்கள். அத்துடன் பெற்றோர்களினதும்,ஆசிரியர்களினதும் ஆசிக்காகக் காத்திருக்கும் அவர்களுக்கு அவர்களின் சிரசில் தங்கள் கரங்களை வைத்து ஆசீர்வதியுங்கள்.


அன்பான மாணவர்களே காலம் ஓடிக் கொண்டுதானே இருக்கும். இந்தநாளும், இந்த மாணவப் பருவமும் கல்விக்கான சந்தர்ப்பங்களாகும் மீண்டும் ஒரு முறை வராது. எனவே இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வியில் முன்னேறுவதே உங்களது ஒரு குறிக்கோளாக இருக்க வேண்டும். பெற்றவரையும், பெரியவரையும், ஆசிரியர்களையும் எல்லாச் சந்தர்பங்களிலும் கௌரவப் படுத்துங்கள். கற்றலில் புலனைச் செலுத்துங்கள் வெற்றி உங்களைத் தேடிவரும். தங்களின் வெற்றிக்காக எனது மனப்பூர்வமான வாழ்த்துக்கள்.

மேலும் இம்மாணவர்களுக்கு ஆரம்பக் கல்வி தொடக்கம் இன்று வரை கல்வியூட்டிவரும் ஒவ்வொருவருக்கும் எனது நன்றிகள். அத்துடன் இவ்விழா சிறக்கவும், “உரைகல்” சஞ்சிகை வெளிவரவும் எனக்கும் இப்பாடசாலைக்கும் உறுதுணையாக நிற்கும் ஆசிரியர் குழாத்திற்கும் பாடசாலைச் சமூகத்திற்கும் நன்றிகள்.



**திரு. S. கலையரசன்**
அதிபர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி

சிறந்ததொரு கல்விப் பாரம்பரியத்தையும் இன, மத, பேதமின்றி கல்வியைச் சிரத்தையோடு வழங்கிக் கொண்டிருக்கும் கல்முனை உவெஸ்லி உயர்தர பாடசாலையின் க.பொ.த (சா/த) மாணவர்களால் வருடா வருடம் வெளியிடப்படும் "உரைகல்" எனும் சஞ்சிகைக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மிகவும் மகிழ்ச்சி அடைகின்றேன்.

இன்றைய கால கட்டத்தில் மாணவர்கள் பல்வேறுபட்ட சவால்களுக்கு முகம் கொடுத்தே கல்விச் செல்வத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டிய சூழ்நிலை காணப்படுகின்றது. இதில் தொழிநுட்பத்துறையின் பாரிய வளர்ச்சியும் ஒன்றாகும். இத்துறையுடன் போட்டி போட்டு முன்னேற வேண்டிய தேவையில் மாணவர்கள் காணப்படுகின்றார்கள்.

க.பொ.த (சா/த) மாணவர்களுக்கு இக்கால கட்டமானது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததொன்றாகும். தாம் கற்ற விடயங்களை சிரத்தையுடன் மீட்டுப் பார்க்க வேண்டிய காலமாகும். இம் மாணவர்கள் அதையும் தாண்டி இவ்வாறானதொரு சஞ்சிகையினை வெளியிடுவது மிகவும் பாராட்டப்படக் கூடிய ஒன்றாகும். இவர்கள் சிறந்த பெறுபேறுகளைப் பெற்று பாடசாலைக்கும் எமது வலயத்துக்கும் பெருமை சேர்த்து சிறந்த பிரஜைகளாகவும் வாழ வாழ்த்துகின்றேன்.



**ஜனாப். M.S. அப்துல் ஜலீல்**
வலயக் கல்விப் பணிப்பாளர்
வலயக் கல்வி அலுவலகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிச் செய்தி

அம்பாறை மாவட்டம் மட்டுமல்லாமல் கிழக்கு மாகாணத்திலேயே புகழ் பெற்ற பாடசாலைகளில் ஒன்றாக விளங்கும் உவெஸ்லி உயர்தர பாடசாலையில் O/L தினத்தை முன்னிட்டு வெளியிடப்படும் இச் சஞ்சிகையில் வாழ்த்துச் செய்தி வழங்குவதில் நான் பெரு மகிழ்ச்சி அடைகின்றேன்.

கல்வி என்னும் மூன்றெழுத்து மாற்றிவிடும் உன் தலையெழுத்தை என்பார்கள். அதாவது கல்வி என்ற கருவியே ஒரு மனிதனை நிறைவான வன் ஆக்குவதுடன் எல்லா சவால்களுக்கும் ஈடுகொடுத்து பொருளாதார தேவையைப் பூர்த்தி செய்து சுயமதிப்புள்ள, பண்புள்ள, மற்றும் ஒழுக்கமுள்ள மனிதன் என்ற அடையாளத்தை அவனுக்கு வழங்குகின்றது.

அந்தவகையில் க. பொ. த சாதாரண தரத்தில் கல்விகற்றுக் கொண்டிருக்கும் நீங்கள் தற்போது வெளியுலகத்தில் உங்களுக்கென்ற ஒரு தனித்துவமான அடையாளத்தை உருவாக்கிக் கொள்வதற்கான நுழைவாயிலாகவே நான் க. பொ. த. உயர்தரத்தினைக் கருதுகின்றேன்.

எனவே இதில் உட்பிரவேசிப்பதற்கான ஆரம்ப அடித்தளமாக விளங்கும் க. பொ. த. சாதாரண தரப் பரீட்சையில் தோற்றி சிறந்த சித்திகளைப் பெற்று கொள்வது உவெஸ்லி பாடசாலை மாணவர்களகிய உங்களைப் பொறுத்தவரையில் பெரும் சவாலாக இருக்க மாட்டாது என்பது எனது திடமான நம்பிக்கையாகும் ஏனெனில் இன்று வரை நீங்கள் உங்களது பெற்றோர்கள், பாடசாலை ஆசிரியர்கள், மற்றும் அதிபர் ஆகியோரின் வழிகாட்டலின் கீழ் முறையாக கல்வி பயின்றவர்கள். மேலும் உங்களிற்கான அறிவு, பண்பு, ஒழுக்கம் மற்றும் நீதி அவை அனைத்தும் அப் பாடசாலைக் கல்வியின் மூலமாக சிறந்த முறையில் உருவாக்கப்பட்டிருக்கும் என்பதனை நான் நன்கு அறிவேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நிலையில் இவ்வருடம் நடைபெறவிருக்கும் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் அதியுயர் புள்ளிகளைப் பெற்று இந்தப் பாடசாலைக்கும் இம் மாவட்டத்திற்கும் பெருமையீட்டிக் கொடுப்பீர்கள் என்பது திண்ணம்.

மேலும் உங்களை வினைத்திறனான முறையில் வழிநடத்திய ஆசிரியர்கள் மற்றும் அதற்கான சிறந்த முகாமைத்துவத்தினை வழங்கி உரிய நேரத்தில் தேவையான வளங்களைப் பெற்றுக் கொடுத்த அதிபர், மற்றும் அதற்கு துணைநின்று உழைத்த உதவி அதிபர்கள் அனைவருக்கும் எனது இதய பூர்வமான வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். அத்தோடு இதனோடிணைந்த செயற்பாடுகள் அனைத்திற்கும் துணை நின்று செயற்பட்ட பெற்றோர்கள் மற்றும் பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள் அனைவரிற்கும் எனது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மனமகிழ்ச்சியடைகின்றேன்.



**திரு. க. பாக்கியராசா,**
திட்டமிடல் பணிப்பாளர்,
மாவட்ட செயலகம்,
அம்பாறை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி

கிழக்கிலங்கையின் அம்பாறை மாவட்டத்தில் கல்முனை மாநகரத்தில் உள்ள புகழ் பூத்த பல கல்விமான்களை உருவாக்கி வரும் முதல் தர பாடசாலையான கல்முனை உவெஸ்லி உயர்தர பாடசாலையினால் கொண்டாடப்படும் O/L தினத்தினை முன்னிட்டு வெளியிடப்படவிருக்கும் இம்மலருக்கு வாழ்த்துரை வழங்குவதில் மிகவும் மகிழ்ச்சியடைக்கிறேன்.

இன்றைய சூழலில் எமது சமுதாயத்தினைப் பொறுத்தவரை கல்வியே மிகப்பெரிய சொத்தாக மாறியுள்ளது. அதுவே அழியாச் செல்வம். இதனை திறன்பட வழங்குவதன் ஊடாக நமது சமுதாயத்தினை நல்லொழுக்கம், கருணை போன்ற காருண்ணிய பண்புகள் ஊடாக பலபடுத்த வேண்டிய ஒரு சூழலில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். இதற்கு ஆசிரியர்களின் பொறுப்பு மிக அளப்பரியது என்பது யாவரும் அறிந்ததொன்று.

இக்கல்லூரி நூற்றாண்டு கடந்து இனம், மதம், மொழி, போன்ற வேறுபாடுகளுக்கு அப்பால் நின்று கல்விப்பணியினை செய்து இனங்களுக்கிடையிலான தனித்தன்மையினையும் மனித நோக்கத்தினையும் கட்டிக்காத்து வருவதனை நானும் ஒரு பழைய மாணவன் என்ற அடிப்படையில் பெருமையடையக்கூடியதாக உள்ளது. இப்பாடசாலையில் கல்வி கற்ற பலர் இன்று உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் பல்வேறு துறைகளில் பல உயர்பதவிகளை வகிப்பது மாத்திரமல்லாமல் இப்பாடசாலை மாணவர்களின் மகிழ்வான கற்றலுக்கும், வளர்ச்சிக்கும் பல்வேறு வழிகளில் ஊக்கமளித்து வருகின்றனர். அந்த வகையில் இப்பாடசாலையின் அபிவிருத்தியில் பங்கு கொள்ளும் ஒவ்வொருவருக்கும் நான் இவ்விடயத்தில் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன். அத்தடன் "நாங்கள் உவெஸ்லியின் பழைய மாணவர்கள்" எனக் கூறிக்கொள்வதில் பெருமிதம் அடைகின்றோம்.

நடைபெற இருக்கின்ற O/L தின விழா மேலும் மேலும் மெருகுடன் நடைபெற வேண்டுமென்றால் மாணவ, மாணவிகள் பல்வேறு சாதனைகளையும், பெறுபேறுகளையும் ஈட்டித் தர வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அச்சாதனைகளையும், பெறுபேறுகளையும் ஈட்டுவதற்கு பக்கபலமாக செயற்படும் ஆசிரியர் குழாமினையும் இவ்விடத்தில் மறக்கமுடியாது. கல்விச் சீர் திருத்தங்களுக்கு ஏற்ப புதிய உலகின் சவால்களுக்கு முகங் கொடுக்கக்கூடிய வகையில் மாணவர்களை ஆளுமை மிக்கவர்களாக தயார்படுத்துங்கள். பழைய மாணவர்கள் என்ற அடிப்படையில் நாம் பக்க பலமாக நிற்போம் என்பதனை உறுதிப்பட தெரிவித்துக் கொள்வதில் மகிழ்ச்சி அடைகின்றோம்.

இக்கல்லூரி நீண்ட கால வரலாற்றை பதிவாக்கிக் கொண்டிருக்கும் இத்தருணத்தில் இக்கல்லூரியின் வெற்றிக்காக தியாக சிந்தனையுடன் பாடுபடும் முதல்வர், ஆசிரியர்கள், மாணவ மாணவிகள் அனைவருக்கும் இறைவனின் நல்லாசி கிடைக்க வேண்டுமென பிரார்த்திப்பதுடன், இக்கல்லூரியினை புதிதாக பொறுப்பேற்றுள்ள கல்லூரியின் முதல்வர் திரு. செ. கலையரசன் அவர்களின் கல்லூரியின் தூர நோக்கத்திற்கேற்ப நவீன உலகின் சந்தைக் கேள்வியினை பூர்த்தி செய்யும் முகமாக கல்வித் திட்மிடலைக் கையாண்டு பெருமளவான அறுவடைகளைப் பெறுவதற்கு இப்பிரதேசத்தின் கல்விச் சமூகம் உயிரோட்டத்துடன் பக்கபலமாக நிற்க வேண்டுமென கேட்டுக் கொள்வதுடன், எமது கல்லூரி எதிர்காலத்தில் சகல துறைகளிலும் வெற்றிபெற்று புகழுடன் மிளிர்வது மட்டுமல்லாது இப்பிரதேசத்தில் மூவின மக்களுக்குமிடையிலான, நல்லிணக்கத்தினை பேணி வருகின்ற பாடசாலையாக திகழ வேண்டும் என, கூறி வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**திரு. S. உதயகுமார்**
திட்டமிடல் உதவி பணிப்பாளர்
ஆலயடிவேம்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிச் செய்தி

கல்முனை வடக்குப் பிரதேச செயலகத்திற்குட்பட்ட கல்முனை மாநகரில் நீண்ட வரலாற்றுப் பாரம்பரியத்தையும்,விடிவிளக்காகவும் விளங்குகின்ற முக்கிய பாடசாலைகளில் ஒன்றான கல்முனை உவெஸ்லி உயர்தர பாடசாலை எதிர்கால சவால்களுக்கு முகங்கொடுக்கக்கூடிய, சிறந்த நற் பண்புகளையும், ஆளுமையையும் கொண்ட மாணவச் செல்வங்களை வழி நடத்துகின்ற ஓர் பாடசாலையாக திகழ்கின்றது இப்பாடசாலையில் O/L தினத்தை முன்னிட்டு நடாத்தப்படுகின்ற விழாவில் வருடாந்தம் வெளியிடப்படும் "உரைகல்" சஞ்சிகைக்கு ஆசிச் செய்தி வழங்குவதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.

தேசிய ரீதியில் நடாத்தப்படுகின்ற க.பொ.த (சா/த) தரப் பரீட்சைக்கு தோற்றுகின்ற மாணவர்களின் ஆக்கங்களையும், அனுபவங்களையும், தமது பாடசாலை கால நினைவுகளையும் சுமந்து வருகின்ற இச்சஞ்சிகை இப்பாடசாலை மாணவர்களுக்கு எதிர்கால வழிகாட்டியாகவும், அவர்களின் வரலாற்று சுவடாகவும் விளங்கும் என்பதில் ஐயமில்லை.

ஒவ்வொரு மாணவரினதும் பாடசாலைக் காலம் என்பது மறக்கமுடியாத அனுபவங்களையும், பல்வேறுபட்ட எதிர்கால சவால்களையும், போட்டிகளுக்கு முகங்கொடுக்கக் கூடிய சூழலையும் ஏற்படுத்துவதாக அமையும். அதிலும் ஒரு முக்கிய கட்டமாக க.பொ.த (சா/த) நிலை எமது கல்வியில் மாத்திரமல்ல வாழ்க்கையில் எதிர்காலத்தை தீர்மானிக்கின்ற வழியை தெரிவு செய்வதற்கான ஓர் தீர்மானம் எடுக்கின்ற நிலையாக இருக்கின்றது. இந்த வகையில் இப்பாடசாலையில் பதினொரு வருடங்கள் கற்று தேசிய பரீட்சைக்கு தயார்ப்படுத்திக் கொண்டு உயர்தரத்திற்கும், தொழில் பயிற்சி நெறிகளுக்கும் தயாராக்குகின்ற ஒரு நிலைதான் இந்த பாடசாலை பருவநிலை. எனவே இந்த நிலையிலே ஒவ்வொரு மாணவர்களும் தங்களது எதிர்காலத்தை சிறந்த முறையில் திட்டமிட்டு தெரிவு செய்து நீங்கள் எதிர்காலத்தில் பிரகாசிக்கக்கூடிய நற் தாரகையாக எமது சமூதாயத்திற்கும், நாட்டிற்கும் சேவையாற்றக்கூடிய நிலையை அடைய வேண்டும். இதற்கு வெறும் கற்றல் நடவடிக்கை மட்டும் போதாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தோடு நல்ல ஒழுக்க விழுமியங்களும், ஆளுமை விருத்தியும் அவசியமாக அமைகின்றது. இந்த வகையில் இப்பாடசாலையானது கற்றல் கற்பித்தலிலும், இணைப்பாடவிதான செயற்பாடுகளிலும், சிறந்த பெறுபேறுகளை மாணவர்கள் பெற்றுக் கொள்ள அயராது முயற்சி செய்து வெற்றி பெற்று வருவதனை நாம் கண்டு கொள்கின்றோம். எனவே இவ்வாறான வெற்றிகளையும், சாதனைகளையும் ஈட்டுவதற்கு அயராது உழைக்கின்ற பாடசாலை முதல்வர், ஆசிரியர்கள், மாணவர்கள், பாடசாலை மேம்பாட்டுச் சமூக உறுப்பினர்கள் போன்றோரை நாம் பாராட்ட வேண்டும்.

இதே போன்று இப்பாடசாலையில் கல்வி கற்று க.பொ.த (சா/த) பரீட்சைக்குத் தோற்றுகின்ற மாணவர்களாகிய நீங்கள் உங்களினதும், பாடசாலையினதும், எதிர்கால இலட்சிய கனவினை அடைந்து கொள்வதற்கு அயராது முயற்சி செய்து வெற்றிகளைத் தட்டிக் கொள்ள வேண்டும் என எனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்வதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.



**திரு. பே. ராஜகுலேந்திரன்**
உதவி திட்டமிடல் பணிப்பாளர்
பிரதேச செயலகம் கல்முனை வடக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிச் செய்தி

2019 வருட கல்வியாண்டில் க.பொ.த (சா/த) பரீட்சைக்கு தோற்றும் மாணவர் தின விழாவின் போது, வெளியிடப்படும் (உரைகல்) சஞ்சிகைக்கு ஆசிச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

கல்முனை உவெஸ்லி உயர்தர பாடசாலை வருடா வருடம் க.பொ.த (சா/த) மாணவர் தின விழா கொண்டாடப்பட்டு வருவது சிறப்பம்சமாகும். 2019ம் ஆண்டில் க.பொ.த (சா/த) பரீட்சைக்கு தோற்றும் மாணவர்கள் பரீட்சையை திருப்திகரமான முறையில் எழுதி சிறந்த பெறுபேறுகளைப் பெற்று க.பொ.த (உ/த) பிரிவில் கற்று பல்கலைக்கழகம் செல்ல வேண்டும் என்று எனது ஆசியை வழங்குவதில் பெருமிதம் அடைகின்றேன்.

அறிவு சார் சமூகத்தில், உலக நாடுகளுடன் போட்டி போட்டு வெற்றி பெற வேண்டிய காலகட்டத்தில் இருந்துகொண்டிருக்கின்றோம். கல்வி இல்லாவிட்டால் வாழ்க்கை என்னும் பாதையில் நோக்கத்தோடு பயணிக்க முடியாத காலமென்பது யதார்த்தமான உண்மையாகும். இதனை கருத்திற்கொண்டு மாணவர்கள் அதிக கரிசனை செலுத்தி தாங்கள் உயர்வதடைவதோடு பெற்றோர்,அதிபர், ஆசிரியர்களை திருப்திப்படுத்தும் வகையிலும் ஒழுக்கமுள்ள சமூக சேவையாளனாக மிளிர வேண்டும் என்று ஆலோசனை கூறி வாழ்த்துகின்றேன்.

கல்வி என்ற ஓட்டப்போட்டியிலே முதலாவது தடை தாண்டலாக, கல்விப் பொதுத்தராதர (சா/த) பரீட்சை காணப்படுகின்து. இத்தடைதாண்டலை தாண்டுகின்ற போது கல்வி எனும் ஓட்டத்தில் மிக நீண்டதூரம் ஓடுவதற்கான சந்தர்ப்பமும் வாய்ப்பும் கிட்டும் என்பதில் எவ்விமான ஐயமும் இல்லை.

சிறந்த பெறுபேறு அவசியம் என திடசங்கற்பம் கொள்ளுங்கள். வெற்றி இலக்கை தீர்மானியுங்கள். அதை அடைய வேண்டுமென தினமும் பல தடவை அடிக்கடி தீவிரமாக சிந்தியுங்கள். கடினமான ஆர்வத்துடன் படியுங்கள். மற்றும் தொடர்ந்து தேர்ச்சியான ஆர்வத்துடன் பயிற்சியும் முயற்சியும் எடுத்தால் வெற்றி உங்கள் கையில் எனக் கூறி எனது ஆசிச் செய்தியை நிறைவு செய்கின்றேன்.



**திரு. S. சரவணமுத்து**
கோட்டக்கல்விப் பணிப்பாளர்
கல்முனை (த.பி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிச் செய்தி

பாடசாலைக் கல்வியின் மிக முக்கியமான தடை தாண்டும் படலம் தான் தரம் 11 வகுப்பாகும். அகில இலங்கை ரீதியில் நீங்கள் எழுதப்போகும் இரண்டாவது பரீட்சையாகும். இப்பரீட்சையில் சித்தி பெற்று உயர்தரத்திற்கு செல்ல எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

தேடல்கள் அதிகரிக்கும் போது வெற்றி வாய்ப்புக்களும் அதிகரிக்கும். கடந்த 11 வருடங்களாக கற்பித்த ஆசிரியர்கள், பெற்றோர்கள் என்பவர்களின் கடின முயற்சிக்கு உங்கள் பெறுபேறுகளே விடையளிக்கும். எனவே இறுதி வரை முயற்சி செய்யுங்கள்.

பாடசாலை, தனிப்பட்ட நலன்விரும்பிகள், கல்வித் திணைக்களம் என்பவற்றின் உதவிகளோடு பல செயலட்டைகளைச் செய்து பயிற்றப்பட்டிருக்கிறீர்கள். எனவே வெற்றி வாய்ப்பு அதிகரிக்கப் பட்டிருக்கிறது என்றே கூறமுடியும்.

பாடசாலைக்கு வெளியாகவும் உங்கள் கற்றல் செயற்பாடுகள் நடைபெற்றிருக்கிறது. எனவே அதனூடாகவும் உங்கள் செயற்திறன் அதிகரிக்கப்பட்டிருக்கிறது. உங்களுக்கு பல வழிகளிலும் உதவிய ஆசிரியர்கள், பகுதித் தலைவர்கள், உதவி, பிரதி அதிபர்களோடு அதிபருக்கும் என் வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றேன்.

2019 தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் அடைவு மட்டத்தை விட அதிகரித்த புள்ளிகளைப் பெற்ற மாணவர்களையும், அகில இலங்கை தமிழ் மொழித்தினத்தின் தேசிய மட்டத்தில் 1ம் இடங்களைப் பெற்ற செல்விகள் தர்சனரூபன் நவீனா, மற்றும் டானியல் லிவோனா, ஆகியோரும் பாராட்டப்படவிருப்பது மகிழ்ச்சிக்குரியதே. அனைவருக்கும் எனது வாழ்த்துக்கள்.



**திரு. வ. பிரபாகரன்**
ஒய்வு நிலை அதிபர்

# Message of Greetings

**‘ Wisdom is a fountain of life to the wise, but trying to educate stupid is a waste of time ’**

**Congratulations on the significant moment (2019) !**

Loving teens, you are lucky to learn from grade 1 to grade 13 at present. It was elective those days. Also the government introduced educational policies for a student who stopped education on the half could continue the education till higher education through vocational training centers, technical colleges, open universities, divisional secretaries and many more.

It is pathetic to say that the parents, school societies allow children to go on a wrong way at their small age due to poverty and lack of awareness regarding the future of them. On the other way they destroy the value of education. Each and every one is answerable to this major issue.

It is so vital for the school society and the students to find out solution for this through media such as TV, radio, newspapers, divisional secretaries, public libraries, learning resource centers and other means of gazette notifications of the government and so on.

Dear children, be watchful and arrest amplified life in the future. The 136th year vintage body provided lively footing to each of you for the hearings that you are to face. By the time I acknowledge the Teachers, Sectional Heads and the School Society for their back up time to time.

May the **Mission of**‘ WESLEY ’ be with you all !



Good Luck !
**S Devachandra**
( Deputy Principal )



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிச் செய்தி

கல்முனை நகரில் அமைந்துள்ள உவெஸ்லி உயர்தர பாடசாலையானது 135 வருடங்களுக்கு மேற்பட்ட பழமைவாய்ந்ததும் வரலாற்று முக்கியத்துவம் மிக்க பாடசாலையாகவும் காணப்படுகின்றது. இப்பாடசாலையிலே இவ்வருடம் க. பொ. த சாதாரண பரீட்சைக்குத் தோற்ற இருக்கின்ற மாணவர்களால் வெளியிடப்படும் “உரைகல்” என்ற நூலுக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதிலும், 11 வருடங்கள் பல துன்பங்கள், துயரங்களுக்கு மத்தியில் கல்விகற்று சிறப்புத் தேர்ச்சி பெற இருக்கும் உங்களை வாழ்த்துவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன். இப்பரீட்சையிலே நீங்கள் சித்திபெறுவதோடு மட்டுமல்லாமல் சிறந்த புகழ்பெற்று வாழ இறைவனை வேண்டுகின்றேன்.

மேலும் கடந்த காலங்களில் உங்களுக்கு கற்றுத்தந்த ஆசிரியர்கள், அத்தோடு ஒத்துழைப்பு வழங்கிய பகுதித் தலைவர்கள், அதிபர்கள் அனைவருக்கும் எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன். அன்புக்குரிய மாணவச் செல்வங்களே உங்களுடைய எதிர்காலம் பொன்னானதாக அமைய வேண்டும் என்று எங்கள் எல்லோரதும் எதிர்ப்பார்ப்பாக இருக்கின்றது. எனவே வீண் விளையாட்டுகளிலும், வேடிக்கைப் பேச்சுகளிலும் காலத்தை கழித்துவிடாமல் கா. பொ. த சாதாரண பரீட்சைக்குப் பின் வருகின்ற உயர்தர பரீட்சைகளிலும் நீங்கள் உங்களுக்கு பொருத்தமான துறையை இனங்கண்டு கற்று சிறப்புறவாழ எனது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவத்துக் கொள்கின்றேன்.



**திரு. S. சிவாகரன்**
உதவி அதிபர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிச் செய்தி

136வது அகவையினை கடந்து கல்முனை நகரில் அமர்ந்து கொண்டு பல்வேறு சாதனைகளையும், வளர்ச்சிகளையும் தன்னகத்தே கொண்டு விளங்கும் உவெஸ்லி உயர்தர பாடசாலையில் கல்வி கற்று இம்முறை க.பொ.த (சா/த) பரீட்சையினை எதிர்கொள்ளவிருக்கும் மாணவர்களுக்கான வாழ்த்துரையினை உரைகல் சஞ்சிகைக்கு வழங்குவதில் பெரு மகிழ்ச்சி அடைகின்றேன்.

பதினொரு வருட காலம் தொடர்ச்சியாக கற்ற கல்வியின் பலாபலன்களை பெறவும், தமது ஆற்றல்களை வெளிப்படுத்தவும் ஒரு சந்தர்ப்பமாக அமையும் இப்பரீட்சையினை மாணவர்களாகிய நீங்கள் சரிவர பயன்படுத்திக் கொள்ள வேண்டும். வாழ்வின் ஒவ்வொரு கட்டத்திலும் உங்களை மேம்படுத்துவதற்கான சந்தர்ப்பங்கள் வருகின்றன. வரும் சந்தர்ப்பங்களை உரியவாறு பயன்படுத்தினால் வாழ்வில் என்றும் உயர்வான நிலையினை நோக்கி பயணிக்க முடியும் என்பது திண்ணம்.

மாணவர்களே இப்பரீட்சையினை உங்களது எதிர்காலத்துக்கான பாதையினை தீர்மானிக்கும் ஒரு சக்தியென எண்ணி எந்த வித பதகளிப்போ, தயக்கமோ இன்றி நன்றாக படித்து நிதானமாக பரீட்சையினை எழுதி சிறந்த பெறுபேறுகளை பெற வாழ்த்துவதுடன் உங்களுடைய கல்விப் பயணமானது மென்மேலும் தொடர வேண்டும் எனவாழ்த்துகிறேன்.

- நன்றி-



**திரு. P. கமலதாசன்**
உதவி அதிபர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிச் செய்தி

மிகவேகமாக மாறிவரும் உலக மாற்றத்திற்கு பொருந்தும் விதமாக தற்போதைய காலமானது விசேட தொழிநுட்ப மாற்றங்கள் நிகழ்ந்து வரும் காலமாகும். இத்தகைய சூழலில் புதிய தொழிநுட்ப அறிவையும் திறனையும் அடிப்படையாகக் கொண்டதொரு சமூகத்தில் வெவ்வேறு விதமாக தொழில்வாய்ப்புகளைக் கருத்தில் கொண்டு எதிர்கால சவால்களை வெற்றிகொள்வதற்கு இனிவரும் காலங்களை நீங்கள் சிறந்த முறையில் திட்டமிட்டு செயல் படுத்த வேண்டியது இன்றைய காலத்தின் கட்டாயமாகும்.

இத்தகைய சூழலில் க. பொ. த (சா/த) பரீட்சையில் சிறந்த பெறுபேற்றை பெற்றுக்கொண்டு உயர்தர கல்விபெற வாழ்த்துக்களை தெரிவிப்பதுடன் உங்கள் கல்வி மேம்பாட்டிற்காக காலம் நேரம் பாராது உங்களுக்கு கல்வியூட்டிய ஆசிரியர்களுக்கும் அதற்கு உறுதுணையாக இருந்த அதிபர், பிரதி அதிபர், உதவி அதிபர்கள், பகுதி தலைவர்கள் அனைவருக்கும் நன்றியைத் தெரிவிப்பதுடன் குறிப்பாக இம்மாணவர்களின் கல்வியில் அக்கறை கொண்டு பல்வேறு வகையான செயற்பாடுகளை செயற்படுத்திச்சென்ற முன்னாள் அதிபர் திரு. வ. பிரபாகரன் சேர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



**திரு. K. ருத்திரமூர்த்தி**
பகுதித் தலைவர் (தரம்-10,11)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிச் செய்தி

நீண்ட காலக் கல்வி வரலாற்றைக் கொண்ட எமது கல்லூரியிலே இவ்வருடம் க.பொ.த (சா/த) பரீட்சைக்குத் தோற்ற இருக்கின்ற மாணவர்களின் ஆக்கங்களைச் சுமந்து வருகின்ற "உரைகல்" சஞ்சிகைக்கு ஆசிச் செய்தி வழங்குவதிலே பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

பதினொரு வருட காலமாகப் பயின்று க.பொ.த (சா/த) பரீட்சையை எதிர் நோக்கி இருக்கின்ற உங்களுக்கு இப் பரீட்சை ஒரு போட்டிப் பரீட்சையாக அமையாவிட்டாலும், போட்டிகள் நிறைந்த உயர்தரப் பிரிவுக்குள் நீங்கள் நுழைவதற்கு இது ஒரு அடிப்படைத்தராதரமாக அமைந்துள்ளது என்பதை அறிவீர்கள். எனவே அதற்கு ஏற்றவாறு இருக்கின்ற ஒரு சில நாட்களை சிறந்த முறையிலே திட்டமிட்டுப் பயன்படுத்தி வெற்றி பெற வேண்டும் என வாழ்த்துகின்றேன்.

இவ்வேளையிலே உங்களை இதுவரை காலமும் நல்வழிப்படுத்திய எமது கல்லூரி நிருவாகத்திற்கும்,கற்பித்த அனைத்து ஆசிரியர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.




**திரு. T. வில்வராஜா**
பகுதித் தலைவர்
தரம் -11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரம் 11A வகுப்பு மாணவர்களுடன் அதிபர், பிரதி அதிபர், உதவி அதிபர்கள், பகுதித்தலைவர்கள் மற்றும் வகுப்பாசிரியர்



T. யதுநாத், P. லோசன், N. லுட்சதன், S. பிரவின், P. ஹம்சவர்தனன், R. றினோதன், E. தனுயன், M.டனுஸ்ஜன், S. சதுசன், R. பிறேமகாந், J. பதுசாந், S. யதுசன், K. லக்ஷிதன், P. சஞ்சை

M. பவித்ரா, J. மதுசா, P. பகிர்த்தனா, V. ரக்சினி, K.F. நஜா, P.M.F. றீபத், P. சிவானிகா, T. சுபர்னிகா, S. லக்ஷிகா, S. சாதிகா, D. மிதுசா, S. வருணிகா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரம் 11B வகுப்பு மாணவர்களுடன் அதிபர், பிரதி அதிபர், உதவி அதிபர்கள், பகுதித்தலைவர்கள் மற்றும் வகுப்பாசிரியர்



(R. றிசோத், J. தானோகாந், N. நசிப், V. மேசாக், M.K.M. சப்றிஸ், K. ஹேமகாந்தன், J. யோயெல்ஜெரோம், A. மிஸ்ரத், P. சவித்ஜன், A. அபிஷேக், U. நிதிஸ)
(S. றஜித்தா, S. அபிநயபிரியா, R. ஹரினி, R. தனுசியா, H. லசாபானு, K. ஜெயசிறி, M. இந்துஜா, N.சக்தி, S. லக்லா, P.D. ஹெலன்சிந்தியா)
Abs: S. பிரவின், T. அனித்குமார், M. அஸ்மி, V. தர்ஷியா, A. மதுஸ்கா, J. கிருதிஷா,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தரம் 11C வகுப்பு மாணவர்களுடன் அதிபர், பிரதி அதிபர், உதவி அதிபர்கள், பகுதித்தலைவர்கள் மற்றும் வகுப்பாசிரியர்**



M. பதுர்ஷன், I.M. பதின், P. தனுஸ், N. கிறைஷன், S. டினோஜன், S. பவதரன், A. நவப்பிரசாத், T.லிதுஷன், T. குஷாந்தன், R. ஜெனசன், M.M. சபீன், S. விலுக்ஷன், A. டில்ஷன், K. ஷோமியா, S. அனுஜா, J. டிலக்ஷிகா, Y. கயானி, M. சர்மிக்கா, S. தீபிக்கா,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரம் 11D வகுப்பு மாணவர்களுடன் அதிபர், பிரதி அதிபர், உதவி அதிபர்கள், பகுதித்தலைவர்கள் மற்றும் வகுப்பாசிரியர்



A.M.M. நிகாத், V. கஜனன், V. டிலைக்ஷன், S. சனுஜன், R. ஜஸ்ரினன், P. தசாங்கன், S. ரொசாந்த, Y. தனோஜ், T. ஹரிஸ், G. சஞ்ஜித், T. விசாந், M.N.F. சப்ரினா, A. கிரிஷாலினி, L.மிஷ்காத், V. லிதுர்சி, S. சங்கீர்த்தனா, R. மிதுனா, R. கிஷாலிகா, N. ஹர்சிகா, R. சுஹா, S. லிதியா, T. அனோஜா, A.F. அப்ஷானாபேகம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தரம் 11E வகுப்பு மாணவர்களுடன் அதிபர், பிரதி அதிபர், உதவி அதிபர்கள், பகுதித்தலைவர்கள் மற்றும் வகுப்பாசிரியர்**



S. டிசாந்தன், K. டினுஷன், S. டினோசாந்தன், K. நிதுஷன், K. பிரசன்னா, P. சாரூபன், R. சஞ்ஜீவன், S. சதுஜன், J.M. அதுஷன், K. ஜோதிக்கா, A. ஜோதிகா, A. அருஸ்கா, M. அபிஸ்கா, T. நரேஸ்கா, S. துஷந்திகா துஷாரி, P. வருசியா, A. நிமேஷிக்கா, R. ஐஸ்வரியா, T. தர்ஷனா, S. பேபிஷாலினி, S. அபிலாசினி, V. காஞ்சனா, P. சருஜிகா, L. அயட்ஷா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# OUR STAFF - 2019

01. Mr.S.Kalaiyarasan (Principal)
02. Mr.s Thevachanthira (DP)
03. Mr. S. Sivakaran (VP)
04. Mr.P. Kamalathasan (VP)
05. Mrs. V. Elanganathan
06. Mrs. SZM. Aboobucker
07. Mrs. S. Thayaparan
08. Mrs. S. Paramalingam
09. Mrs.P. Balasupramaniyam
10. Mrs. Y. Selvarajah
11. Mrs. S. Shanthakumar
12. Mrs. M.T. Alagurajah
13. Mrs. M. Kopalasingam
14. Miss. K. Annanesam
15. Mrs. R. Arulrajah
16. Mrs. S. Mahenthirarajah
17. Mrs. V. Thirunavukarasu
18. Mrs. JR. Jeevakadacham
19. Mrs. AJ. Christorex
20. Mrs. G. Siva
21. Mrs. N. Amalanathan
22. Mr. S. Ravinthirakumar
23. Mrs.I. Kulendran
24. Mr. MAMM. Rishmy
25. Mrs. R. Sayatharan
26. Mrs. V.Ganesan
27. Mrs. B. Chandrakumar
28. Mr.s. P.Ithayarajah
29. Mrs. Allies
30. Mr. T. Vilvarajah
31. Mrs.M. Rangarajan
32. Mrs.T. Kovinthasami
33. Mrs.M. Sureshkumar
34. Mr. S. Uthayarajah
35. Mr. K. Ruthramoorthy
36. Mrs.I. Arulgnanamoorthy
37. Mrs. K. Sanathanan
38. Mrs. S. Vaathaman
39. Mrs.K. Umavaran
40. Mrs. V. Vijayakumar
41. Mr.G. Alfred Haran
42. Mrs.U. Nimal
43. Mr. MSM. Nakeeb
44. Mrs. CP. Justin
45. Miss.J. Sivakaran
46. Mrs. L. Arulkantharajah
47. Mrs. R. Maril Mariyaraj Vaz
48. Mr. V. Inthirakumar
49. Mrs. P. Manokaran
50. Mrs. S. Visvanathan
51. Mrs. J. Mohan
52. Mrs. N. Thayaparan
53. Mrs. B. Chandrakumar
54. Mrs. S. Mohan
55. Mr. K. Vijayakumar
56. Mrs. S. Mathiyalagan
57. Mrs. S. Kalawathani
58. Mrs. T. Subarajan
59. Mr. S. Partheepan
60. Mr. S. Suthakaran
61. Mr. P. Ranjan
62. Mr. T Kartheepan
63. Mr. Y. Thavajeevan
64. Mr. S. Vimalaraj



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

65. Mrs. Y. Baskaran
66. Mrs. N. Sutharsan
67. Mr. S. Srithaksan
68. Mr. A. Prinsly Bernard
69. Mr. MSM. Yasar
70. Mrs. S. Tharmenthira
71. Mr. S. Piratheepathasan
72. Mrs. K. Thevaranjan
73. Mrs. S. Thasarathan
74. Mr. K. Raju
75. Mrs. J. Sritharan
76. Mrs. S. Rushikaran
77. Mrs. A.L. Fathima - Risna
78. Mrs. N. Thupan
79. Mrs. MGF. Nasriya
80. Mr. S. Sivaranjan
81. Mrs. I. Marutha Shamai
82. Mr. NM. Jaleel
83. Mrs. AM. Sifra
84. Miss. K. Nitharsika
85. Miss. MBN. Suja
86. Mr. MSM. Jihath
87. Mr. M.M. Shajath
88. Mrs. M. Thayaparan
89. Mrs. S. Segar
90. Mr. S. Satheeskumar
91. Mrs. M. Sanmugarajah
92. Mrs. K. Vijyaragavan
93. Miss. N. Thanusiya
94. Mrs. S. Kumanan
95. Mrs. S.L. Riswana
96. Mr. T. Sasikaran
97. Mr. S. Shopanarajah
98. Mrs. T. Kumuthan
99. Mrs. T. Solomi

## Non Acadamic Staff

04. Mrs. T. Sivakumar
02. Miss. J. Grase
03. Mr. J. Balasundaram
01. Mr. S. M. Farsath
05. Mr. N. Thivviyakumar



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பகுதித் தலைவர்கள் பாட ஆசிரியர்கள்

| | | |
|---|---|---|
| பகுதித் தலைவர்கள் | : | திரு. K. ருத்திரமூர்த்தி |
| | : | திரு. T. வில்வராஜா |
| வகுப்பு ஆசிரியர்கள் | : | திரு. M.S.M. யசார் |
| | : | தரு. S. சிவரஞ்சன் |
| | : | திருமதி. S. பரமலிங்கம் |
| | : | திருமதி. L. அருள்கந்தராஜா |
| | : | திருமதி. R. அல்லிஸ் |

பாட ஆசிரியர்கள்:

| | | |
|---|---|---|
| தமிழ்மொழி | : | திருமதி. S. மதியழகன் |
| | : | திருமதி. S. மகேந்திரராஜா |
| | : | திருமதி. S. பரமலிங்கம் |
| | : | திருமதி. S. சாந்தகுமார் |
| | : | திருமதி. R. அல்லிஸ் |
| கணிதம் | : | திரு. K. ருத்திரமூர்த்தி |
| | : | திரு. T. வில்வராஜா |
| | : | செல்வி. K. அன்னநேசம் |
| | : | திருமதி. G. சிவா |
| | : | திரு. S. உதயராஜா |
| விஞ்ஞானம் | : | திரு. M.S.M. யசார் |
| | : | திரு. S. சிவரஞ்சன் |
| | : | திரு. M.S.M. நகீப் |
| | : | திருமதி. S. பார்த்தீபன் |
| | : | திரு. S. சதீஸ்குமார் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| ஆங்கிலம் | : திரு. S. ரவீந்திரகுமார் |
| | : திருமதி. I. அருள் ஞானமூர்த்தி |
| | : திருமதி. S. வாதமன் |
| | : திருமதி. M. ரங்கராஜன் |
| | : திருமதி. R. மரியராஜ் வாஸ் |
| வரலாறு | : திருமதி. S. தயாபரன் |
| | : திருமதி. K. உமாவரன் |
| | : திருமதி. P. மனோகரன் |
| | : திருமதி. L. அருள்கந்தராஜா |
| சைவசமயம் | : திருமதி. V. திருநாவுக்கரசு |
| | : திருமதி. K. ஜெயரூபன் |
| | : திரு. S. விமல்ராஜ் |
| | : திருமதி. T. கோவிந்தசாமி |
| கிறிஸ்தவம் | : திரு. G. அல்பிரட்கரன் |
| கத்தோலிக்கம் | : திருமதி. A.J. கிறிஸ்ரோறெக்ஸ் |
| இஸ்லாம் | : திரு. N.M. ஜலீல் |
| சிங்களம் | : திருமதி. S.L. றிஸ்வானா |
| புவியியல் | : திருமதி. S. தயாபரன் |
| குடியுரிமைக்கல்வி | : திரு. T. கார்த்தீபன் |
| | : திரு. K. ராஜு |
| | : திருமதி. K. சனாதனன் |
| வர்த்தகம் | : திருமதி. S. விஸ்வநாதன் |
| சித்திரம் | : திரு. S. சிறிதக்சன் |
| சங்கீதம் | : திருமதி. K. விஜயராகவன் |
| நடனம் | : திருமதி. N. தயாபரன் |
| | : திருமதி. M. சுரேஸ்குமார் |
| | : திருமதி. S. தர்மேந்திரா |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் இலக்கியநயம் : திருமதி. S. சாந்தகுமார்

: திருமதி. Y. பாஸ்கரன்

நாடகமும் அரங்கியலும் : திருமதி. R. அல்லிஸ்

: திருமதி. K. தேவரஞ்சன்

தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் : திரு. S. பிரதீபதாசன்

வடிவமைப்பு, நிருமானத்தொழில்நுட்பம் : திரு. Y. தவஜீவன்

சுகாதாரமும் உடற்கல்வியும் : திருமதி. J.R. ஜீவகடாட்சம்

: திரு. M.A.M.M. நிஸ்மி

: திருமதி. K. ஜெரூபன்

மனைப்பொருளியல் : திருமதி. N. அமலநாதன்

விவசாயமும் உணவுத் தொழில்நுட்பமும் : திருமதி. B. சந்திரகுமார்

மின் இலத்திரனியல் தொழில்நுட்பம் : திரு. K. ராஜூ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# School Management Committee

| | | |
|---|---|---|
| Principal | : | Mr. S. Kalaiyarasan |
| Deputy Principal | : | Mr. S. Thevachandra |
| Asst. Principal | : | Mr. P. Kamalathasan |
| | | Mr. S. Sivakaran |
| Primary Incharge | : | Mrs. M. Alagurajah |
| | : | Mr. S. Ravindrakumar |
| | : | Mr. K. Vilvarajah |
| | : | Mrs. S. Paramalingam |
| | : | Mrs. R. Mariyaraj Vaz |
| | : | Mrs. P. Manokaran |
| | : | Mrs. Pamini Ithayarajah |
| | : | Miss. K. Annanesam |
| Subject Co-ordinators | : | Mr. S. Ravindrakumar |
| | : | Mrs. S. Partheepan |
| | : | Miss. K. Annanesam |
| | : | Mrs. S. Paramalingam |
| | : | Mrs. P. Manokaran |
| | : | Mrs. Mrs. M. Sureshkumar |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## க. பொ. த. (சா/த) பரீட்சையின் பெறுபேறுகளும் உயர்தர வகுப்புத் தகுதி பெற்றோர் விபரமும்

| | | | உயர்தர வகுப்பிற்கு தகுதி பெற்றோர் | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| ஆண்டு | தோற்றிய வர்கள் | சித்தியடைந் தோர் | விஞ்ஞா னம் | கணி தம் | வர்த்த கம் | கலை | தொ. நு |
| 1994 | 109 | 55 | 06 | 09 | 10 | 30 | |
| 1995 | 134 | 35 | 06 | 08 | 07 | 14 | |
| 1996 | 164 | 33 | 05 | 07 | 06 | 15 | |
| 1997 | 137 | 93 | 14 | 20 | 20 | 39 | |
| 1998 | 169 | 67 | 25 | 16 | 12 | 14 | |
| 1999 | 139 | 118 | 14 | 15 | 25 | 64 | |
| 2001 | 130 | 118 | 14 | 11 | 30 | 53 | |
| 2002 | 112 | 89 | 15 | 10 | 22 | 42 | |
| 2003 | 117 | 90 | 20 | 12 | 23 | 35 | |
| 2004 | 114 | 90 | 18 | 12 | 22 | 38 | |
| 2005 | 110 | 80 | 20 | 11 | 24 | 25 | |
| 2006 | 125 | 71 | 12 | 08 | 20 | 31 | |
| 2007 | 119 | 67 | 09 | 10 | 10 | 38 | |
| 2008 | 106 | 53 | 06 | 09 | 10 | 28 | |
| 2009 | 116 | 72 | 14 | 18 | 12 | 28 | |
| 2010 | 119 | 76 | 15 | 09 | 14 | 38 | |
| 2011 | 121 | 72 | 13 | 10 | 15 | 34 | |
| 2012 | 110 | 65 | 13 | 07 | 11 | 34 | |
| 2013 | 105 | 83 | 15 | 17 | 10 | 41 | |
| 2014 | 96 | 48 | 09 | 07 | 13 | 19 | |
| 2015 | 104 | 63 | 15 | 10 | 10 | 28 | |
| 2016 | 149 | 64 | 10 | 10 | 09 | 23 | 12 |
| 2017 | 126 | 64 | 16 | 10 | 08 | 19 | 11 |
| 2018 | 118 | 77 | 12 | 10 | 03 | 39 | 13 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# க. பொ. த. (சா/த) பரீட்சையில் முதன்மை நிலை பெற்ற மாணவர்கள்

| ஆண்டு | மாணவர் பெயர் | A | B | C | D |
|---|---|---|---|---|---|
| 2001 | செல்வன். C.S. ஆனந்தராஜா | 09 | 01 | - | - |
| 2002 | செல்வன். K. விஜயராகவன் | 04 | 03 | 02 | 01 |
| 2003 | செல்வன். C. பிரகலாதன் | 09 | 01 | - | - |
| 2004 | செல்வன். A. அனஸ்லி | 10 | - | - | - |
| 2005 | செல்வி. R. அமெண்டா | 10 | - | - | - |
| | செல்வி. T. ஹேமப்பிரியா | 10 | - | - | - |
| 2006 | செல்வி. S. திலக்ஷி | 10 | - | - | - |
| | செல்வி. A. கௌசிகா | 10 | - | - | - |
| 2007 | செல்வன். P. சகிலன் | 08 | 01 | 01 | - |
| 2008 | செல்வன். P. கேதுஜன் | 08 | 01 | - | - |
| | செல்வன். B. அஜந்தன் | 08 | 01 | - | - |
| 2009 | செல்வன். N. உபேந்திரன் | 08 | - | 01 | - |
| 2010 | செல்வி. T. பவித்ரா | 06 | 02 | 01 | - |
| 2011 | செல்வி. S. குகடர்ஷி | 08 | - | 01 | - |
| 2012 | செல்வி. Y. ரஜித்தா | 08 | - | - | 01 |
| 2013 | செல்வி. T. நிலுக்ஷா | 08 | 01 | - | |
| 2014 | செல்வன். A.K.M. அப்கார் | 09 | - | - | - |
| 2015 | செல்வன். G. வினோஜித் | 09 | - | - | - |
| | செல்வி. S. விருஷாணி | 09 | - | - | - |
| | செல்வி. K. ஜெயதாரணி | 09 | - | - | - |
| | செல்வி. E. நிஷாகரி | 09 | - | - | - |
| 2016 | செல்வன். N. விதுர்சன் | 09 | - | - | - |
| 2017 | செல்வன். G. தட்சிதன் | 09 | - | - | - |
| | செல்வி. S. அனோஜிகா | 09 | - | - | - |
| | செல்வி. R. டனீசா | 09 | - | - | - |
| | செல்வி. A.R.M. அஷ்ரியா | 09 | - | - | - |
| 2018 | செல்வி. P. சதுர்சிகா | 09 | - | - | - |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2018 இல் க.பொ.த (சா/த) சிறந்த பெறு பேறுகளைபெற்ற மாணவர்கள்

1. செல்வி. P. சதுர்சிகா
2. செல்வன். S. சிறிஜித்
3. செல்வன். N. டங்ஷன்
4. செல்வன். S. சனோஜன்
5. செல்வன். A. ஹரிசயன்
6. செல்வி. R. குயின்சி

## அகில இலங்கை தமிழ்மொழித்தினம் - 2019 இல் தங்கப் பதக்கம் பெற்ற சாதனையாளர்கள்

* செல்வி. தர்சனருபன் நவீனா * செல்வி. டானியல் லிவோனா

## 2019 தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திபெற்று பாராட்டப்படுவோர்

1. செல்வன். K. லக்சிகன்
2. செல்வன். ASA. சஷாட்
3. செல்வன். S. சஜித்
4. செல்வன். A. மிதுசிகன்
5. செல்வி. S. தரணியா
6. செல்வி. S. மோனிஷா
7. செல்வன். A. ஆகாஸ்
8. செல்வி. V. டிலஷ்விகா
9. செல்வன். S. இந்துஜன்
10. செல்வன். R. ஜெயந்தராஜ்
11. செல்வன். M. யுகேஸ்
12. செல்வி. T. யுவேனிக்கா
13. செல்வன். S. நிதர்சன்
14. செல்வன். K. ரோகித்
15. செல்வி. J. நேயா
16. செல்வன். R. கனிஸ்டன்
17. செல்வி. V. அபிந்தா
18. செல்வி. S. ரக்ஷனா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடாமுயற்சி வெற்றியைத் தரும்

மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவரும் வாழ்நாளை வீண் நாளாக்காமல் தனக்குக் கிடைத்துள்ள ஆயுளில் அரும் பெரும் காரியங்களைச் சாதிக்க வேண்டும். மானுட வாழ்வு நல்வாழ்வாக மிளிர்வதற்கு பல வழிகள் உள்ளன. அவற்றுள் ஒன்று தான் விடாமுயற்சி. இறைவன் படைப்பிலே மனிதர்கள் எல்லோரும் ஆற்றல் மிக்கவர்களாகத்தான் படைக்கப்படுகிறார்கள். அவர்களது ஆற்றல் வெளிக்கொணரப்படுவது மனதிலும், சிந்தனையிலும் செயற்பாட்டிலும் தான் தங்கியுள்ளது. உலகில் வாழ்ந்த சாதனையாளர்கள், பெரியோர்கள் "முயற்சியே வெற்றிக்கு அடிகோலுவது" என தம் அனுபவத்தால் கூறியுள்ளனர். பல ஆராய்ச்சியாளர்களும், விஞ்ஞானிகளும், வீரர்களும், ஆரம்பத்தில் தோல்விக்கு முகங்கொடுத்த போதிலும் அயராத முயற்சியால் வெற்றி பெற்ற சந்தர்ப்பங்கள் ஏராளமுள்ளன.

மனிதர்கள் ஒவ்வொருவருக்கும் உயர்ந்த குறிக்கோள் இருக்க வேண்டும். குறிக்கோளற்றோர் இறந்தவர்களுக்கு சமமானவர்கள். எப்படியும் வாழலாம் என்றில்லாமல் இப்படித்தான் வாழ வேண்டும் என்ற இலட்சியத்தைக் கொண்டு அதனை அடைவதற்கு அயராத முயற்சி எடுத்து வாழ்வில் வெற்றி பெறவேண்டும். உலக வரலாற்றில் ஒளி படைத்தவர்களாக மின்னிக் கொண்டிருக்கும் தலைவர்களது வரலாற்றை ஆராய்ந்து பார்த்தால் அவர்கள் தமது குறிக்கோளை, இலட்சிய வேட்க்கையை எய்துவதற்கு அல்லும் பகலும் அயராது எடுத்த முயற்சிதான் அவர்களை உலகம் போற்றும் தலைவர்களாக உருவாக்கியிருக்கின்றது என்பதை அறியமுடிகிறது.

கடின உழைப்பின்றி எதனையும் சாதிக்க முடியாது. மின்குமிழைக் கண்டு பிடித்த தோமஸ் அல்வா எடிசன் எனும் விஞ்ஞானி ஒரு நாளில் இருபத்தொரு மணிநேரம் ஆராய்ச்சியில் ஈடுபட்டு ஆயிரம் தடவைகள் தோல்விக்குப்பின் விடாமுயற்சியுடன் வெற்றிகண்டவர். அதேபோன்று தான் ஸ்கொட்லாந்து படைக்குத் தலைவராக இருந்த இராபர்ட் புரூஸ் ஆங்கிலேயருக்கு எதிராகப்படையெடுத்து தோல்வி கண்டு ஏக்கமுற்று இருந்தவேளையில் சிலந்தி ஒன்று வலை பின்னுவதில் ஆறு தடவைகள் தோல்வியுற்று மீண்டும் மீண்டும் விடாமுயற்சியுடன் வலைபின்னுவதில் வெற்றிகண்டதைப்பார்த்து: ஊக்கம் கொண்டு ஆங்கிலேயருக்கு எதிராக ஏழாவது தடவை போரிட்டு வெற்றி கண்டு சரித்திரத்தில் இடம் பெற்றார். இந்தியாவிற்கு விடுதலைச்: சுதந்திரம் பெற்றுக் கொடுத்த மகாத்மா காந்தி,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலட்சியமேதை ஆபிரகாம்லிங்கன், பாரதப்பிரதமர் பண்டிதர் ஜவஹர்லால் நேரு போன்ற பெரியார்களது வாழ்க்கை வரலாறுகள் விடாமுயற்சி வெற்றியைத் தரும் என்பதற்கான எடுத்துக்காட்டுகளாகும்.

இன்று வாழ்க்கையை ஒரு சுமையாகக் கருதுபவர்கள், சோர்வுடன் வாழ்பவர்கள், எதற்கெடுத்தாலும் சலித்துக்கொள்பவர்கள், தாழ்வுணர்ச்சி கொண்டு என்னால் முடியாது என்று ஒதுங்குபவர்கள் பலர் இருக்கின்றார்கள். இந்த பரிதாபகரமான எண்ணப் போக்கு மாறவேண்டும். தகர்த்து எறியப்பட வேண்டும். மனிதனால் சாதிக்கமுடியாதது எதுவும் இல்லை. உயர்ந்த எண்ணத்துடன் எந்த வேலையையும் விடாமுயற்சியுடன் நிறைவேற்றினால் வெற்றிபெறுவதுடன் சிறக்கும் என்பதும் உறுதி.

"முயற்சி திருவினையாக்கும் முயற்றின்மை
இன்மை புகுத்திவிடும்".

**திருமதி. சாந்தகுமாரி பரமலிங்கம்**
ஆசிரியை
B.A. PGDE
குரு பிரதீபா பிரபா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திறமையும் தன்னம்பிக்கையும்

திறமையும் தன்னம்பிக்கையும் ஒன்றுடன் ஒன்று நேர் கோட்டில் பயணம் செய்பவை ஆகும்.

திறமை என்பது நீங்கள் உங்கள் துறையில் அதாவது குறிப்பிட்ட ஒரு தொழில் துறையில் அடைந்துள்ள செயல் திறன் ஆகும்.

மாணவர்கள் ஆகிய உங்களின் தற்போதைய தொழில் என்ன தெரியுமா? அதுவே கற்றல் ஆகும். "செய்யும் தொழிலே தெய்வம்" என்பதன் அடிப்படையில் இறைவனுக்காகவே கற்றல் தொழிலை திறம்படச் செய்யுங்கள். இவ்வாறு கற்றலில் திறமைகளை நாளுக்கு நாள் வளர்த்துக் கொண்டே போக வேண்டும் இது போட்டி மிகுந்த சமுதாயத்தில் உங்கள் தன்னம்பிக்கையை அதிகரிக்க மட்டுமல்ல, நீங்கள் வாழ்க்கையில் வெற்றி பெறவும் உறுதுணையாக அமையும்.

ஒட்டுமொத்தமாக ஒன்பது, பத்து பாடங்களை மாணவர்களின் தலையில் கட்டி விட்டால் மாணவர்கள் மனம் தளர்ந்து போய்விடுவார்கள். இம்மாதிரியான சூழ்நிலையில் மாணவர்கள் என்ன செய்ய வேண்டும்?

நிறைய வேலைகள் இருந்தால் அவற்றை மொத்தமாக நினைத்துப் பார்த்தால் மலைப்பு ஏற்படும். மாணவர்களின் தன்னம்பிக்கை போகவும் வாய்ப்புண்டு. இவ்வாறான சந்தர்ப்பத்தில் குழந்தைகளின் மன நிலையில் இருங்கள் என்கிறார்கள் மனோவியலாளர்கள்.

ஒரு குழந்தையிடம் ஒரு வேலையைச் செய்யச் சொன்னால் மிக விரைவாக துடிப்பாகச் செய்து முடிக்கும். காரணம் அவ்வேலைக்கு அடுத்துள்ள வேலைகளை நினைத்து திகைப்பு ஏற்படுவதில்லை.

மாணவர்களாகிய உங்கள் முன்னால் காத்துக் கொண்டிருக்கும் ஒன்பது, பத்து வேலைகளை நினைத்து நீங்கள் மலைத்துக் கொண்டிருப்பதில் என்ன ஆகிவிடப்போகிறது. நாளாக நாளாக நீங்கள் செய்து முடிக்க வேண்டிய வேலைகள் குவிந்து கிடப்பதைப் பார்த்து உங்கள் மனம் தளர்ந்துதான் போகும்.

அதனால் உங்களின் பெரிய வேலைகளை பிரித்து பிரித்து சிறு வேலைகளாக மாற்றுங்கள். ஒவ்வொன்றாக முடித்து விட்டுப் பாருங்கள் ஒவ்வொரு வேலையும் முடிய முடிய உங்கள் தன்னம்பிக்கை அதிகரித்து செயல் திறனும் அதிகரிக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே மாணவர்களாகிய உங்களது திறமையை மேம்படுத்த கற்றல் தொழிலில் முதலில் நீங்கள் செய்ய வேண்டியது என்ன? கற்றலை நேசிக்க வேண்டும், பாடங்களை நேசிக்க வேண்டும், பாட ஆசிரியரை நேசிக்க வேண்டும், உங்கள் எதிர் காலத்தைப் பற்றியும் சற்று யோசிக்கவும் வேண்டும். இவ்வாறான சூழ்நிலையில் கற்பதற்கான பாடங்களை சிறு சிறு அலகுகளாகப் பிரித்துக் கற்றல் வேண்டும், நேர சூசி போட்டு கற்றல் வேண்டும், ஆசிரியர் கற்பிக்கும் போதே கற்றல் வேண்டும், கற்கும் பாடங்களை அன்றன்றைக்கே படித்தல் வேண்டும், நண்பர்களுடன் சேர்ந்து படித்தல் வேண்டும், நூலகத்திற்கு சென்று படித்தல் வேண்டும், அதிகாலையில் மனனம் செய்தல் வேண்டும், கூடியளவு பயிற்சிகளை செய்தல் வேண்டும்.

மாணவர்களாகிய நீங்கள் கற்றல் தொழிலை சிறப்பாக செய்வதற்கு சில சந்தர்ப்பங்களில் உங்கள் குடும்பச் சூழலோ, உங்கள் பொருளாதார நிலையோ, மற்றும் கவனக்கலைப்பான்களோ, மற்றும் நண்பர்களோ, தடைகளை ஏற்படுத்துபவைகளாக காணப்படலாம். நீங்கள் உற்சாகமாகப் பணிபுரிய ஒரே வழி நீங்கள் செய்யும் கற்றல் தொழிலை அர்ப்பணிப்புடன் செய்வதுதான்.

மனமொன்றிச் செய்யும் எந்த வேலையும் உங்களுக்கு சுமையாகத் தெரியாது இவ்விடத்தில் ஒரு உதாரணத்தைக் கூற விரும்புகிறேன்.

மூன்று பேர் ஒரு கோயில் கட்டுமாணப் பணிகளில் ஈடுபட்டிருந்தனர். மூன்று பேரும் பெரிய பாறாங்கற்களை உடைத்துக் கொண்டிருந்தார்கள்.

வழிப்போக்கர் ஒருவர் முதலாமவரிடம் கேட்டார், " நீங்கள் என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள்"?

அதற்கு அவர் பதில் சொன்னார் " நான் கற்களை உடைத்துக் கொண்டிருக்கின்றேன்."

வழிப்போக்கர் இரண்டாமவரிடம் அதே கேள்வியைக் கேட்டார். அதற்கு அவர் சொன்னபதில், " நான் என் குடும்பத்திற்காக உழைத்துக் கொண்டிருக்கின்றேன்."

வழிப்போக்கர் மூன்றாம் நபரிடம் அதே கேள்வியைக் கேட்டார். அவர் அதற்கு பதில் சொன்னார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“நான் இறைவனுக்கு ஆலயம் கட்டும் புனித பணியில் என்னை அர்ப்பணித்துக் கொண்டே இருக்கிறேன்”

இந்த மூன்று பேரும் ஒரே வேலையைத்தான் செய்தார்கள். ஆனால் ஒவ்வொருவரும் அந்த வேலையின் மீது வைத்திருந்த மனோ நிலை அந்த வேலையை எளிமையாகவும், கடினமானதாகவும் மாற்றிவிட்டது.

நிச்சயம் அந்த மூன்று பேரில் மூன்றாவது மனிதர் அந்த வேலையை எளிதாகவும், மனநிறைவோடும், தன்னம்பிக்கையோடும், புத்துணர்ச்சியோடும் செய்து இருப்பார்.

எனவே மாணவர்களாகிய நீங்கள் திறமையையும் தன்னம்பிக்கையையும் வளர்க்க வேண்டும் எனின், கற்றலை நேசித்தால் மட்டும் போதாது அர்ப்பணிப்புடன் கற்றல்தொழிலைச் செய்ய வேண்டும்.

மாணவர்கள் ஆகிய நீங்கள் உங்கள் கற்றலை எப்போதும் புதுப்பித்துக் கொண்டே வாருங்கள். புதிய சூழலை எதிர் கொள்ளத் தயார் ஆகுங்கள். விஞ்ஞானமும், தொழில் நுட்பமும் நாளுக்கு நாள் வளர்ந்து வரும் சூழ் நிலையில் காலத்திற்குத் தகுந்த மாற்றங்களை ஏற்றுக் கொண்டு வாழ்வில் வெற்றி பெறுங்கள்.

**திருமதி. சுமதினி விஸ்வநாதன்** B.B.A (Dip.in.ed)
ஆசிரியை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வியின் மகத்துவம்

* இந்த உலகையே மாற்றக்கூடிய ஆயுதத்தின் பெயர் கல்வி

**- நெல்சன் மன்டேலா**

* படிக்காமல் இருப்பதை விட பிறக்காமலே இருப்பது மேல்

**- பேரறிஞர் பிளேட்டோ**

* அறியாமை வெட்கப்படவேண்டியது ஆனால் அறிந்து கொள்ள விருப்பமில்லாமை அதனை விட வெட்கக்கேடு

**- பென்ஞமின் பிராங்கிளின்**

* பெற்ற பிள்ளை கைவிட்டாலும் கற்ற கல்வி கைவிடாது

**- மகாத்மா காந்தி**

* மனிதன் தன்னுடைய கல்வி மூலமாக தன் அறிவை மேம்படுத்துவதை மட்டுமே முக்கிய பணியாக மேற்கொள்ள வேண்டும்

**- சுவாமி விவேகானந்தர்**

* முதுமையை முன்னிட்டு எந்தவொரு மனிதனும் தன்னை மேம்படுத்துவதற்கான பாதுகாப்பு பணிகளிலே, மிகச்சிறந்தது கல்வி

**- அரிஸ்ரோட்டில்**

* கத்திகளினால் வென்ற யுத்தங்களை விட புத்திகளினால் வென்ற யுத்தம் அதிகம்

**- எட்மன் பர்க்**

வாளின் உடைய கூர்மையும், நூலின் உடைய கூர்மையும் மட்டுமே இவ்வுலகை ஆள்கின்றன. காலப்போக்கில் வாளின் கூர்முனை மங்கி நூலின் கூர்மை மட்டுமே மிஞ்சி நிற்கின்றது. கூர்தீட்டப்படாத அனைத்துமே மங்கி விடும். மூளை கூர்மையாக இருக்க வேண்டுமென்றால் நாம் தொடர்ந்து கல்வி கற்க வேண்டும். இக்கல்வியின் அவசியத்தினை உணர்ந்த காரணத்தினால் தான் . . .



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- நஞ்சு கொடுக்கப்படும் நேரம் வரை கிரேக்க நாட்டு கவிதைகளை படித்துக் கொண்டும், கேட்டுக் கொண்டும் இருந்தார் **சோக்கிரட்டீஸ்**

- தூக்குக்கயிற்றினை முத்தமிடும் வரையில் படித்துக் கொண்டுமிருந்தவர் **உமர் முஹ்தர்**

- தூக்குமேடைக்கு அழைத்து செல்லும் வரையில் படித்துக் கொண்டிருந்தவர் **பகவத் சிங்**

- படித்துக் கொண்டிருந்த புத்தகத்தை முடித்துவிட வேண்டும் என்பதற்காக தனது அறுவை சிகிச்சையை அடுத்த நாள் மாற்றிக் கொண்டவர் **அறிஞர் அண்ணா**

- பயணங்களின் போது படிப்பதே தனது வழக்கமாகக் கொண்டவர் பாரநாட்டின் முதல் பிரதமர் **ஜவஹர்லால் நேரு**

- படித்துக் கொண்டிருந்த புத்தகத்தை முடிக்காமல் தூக்கத்தை மறந்தவர் இந்திய முன்னாள் ஜனாதிபதி **இராதா கிருஷ்ணர்**

- படிப்பால் மட்டுமே பாரதத்தை பார் ஆள வைக்கமுடியும் என்று படித்து கூறியவர் மகாமனிதன் **A.P. அப்துல்கலாம்**

- 35ஆண்டுகள் நூலகத்திலேயே மூழ்கி மூலதனம் என்ற வேதாந்தத்தை கண்டுபிடித்தவர் **கார்ள் மாக்ஸ்**

கல்வி ஒரு மனிதனை எந்தளவிற்கு உயர்த்தும் என்பதை ஆசிரியர்களுக்கும், மாணவர்களும் உணர வேண்டும்

*பிக்காஷோவின் ஓவியத்தை விடவும்*
*பீத்தோவின் இசையை விடவும்*
*பீயூக்கோ உடைய ஒரு வாக்கியம்*
*கவிதையினுடைய ஒரு கடைச்சொல்*
*கம்பனின் உடைய ஒரு செய்யுள்*
*பாரதியின் ஒரு பாட்டு.*

எமது வாழ்க்கையையே புரட்டி போட்டு விடும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கற்றுக் கொள்வது மனிதப்பண்பு
கற்றுக் கொடுப்பது மனித மாண்பு
கற்க தொடங்குபவன் மாணவன்
கற்றுக் கொண்டே இருப்பவன் ஆசிரியன்"

எமக்கு அதிகமான பூக்கள் வேண்டுமெனில் அதிகமான செடிகளை நட வேண்டும் என்பதே இயற்கை. இவ்வாறே எமக்கு அதிகமான அறிவு வேண்டுமெனின் அதிகமான புத்தகங்களை கற்க வேண்டும் - கற்றுக் கொண்டே இருக்க வேண்டும்.

- படித்ததில் பிடித்தவை -

**திரு. யோ. தவஜீவன்**
(ஆசிரியர்)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாய் பற்றிய பொன் மொழிகள்

01. ஒருமுறை தாயைச் சுற்றி வலம் வந்து வணங்கினால் ஆயிரம் முறை கங்கையில் நீராடிய பலன் கிடைக்கும்.

02. உலகத்திலுள்ள செல்வங்கள் அனைத்தையும் ஒரு தட்டினுள்ளும் தாயை ஒரு தட்டினுள்ளும் வைத்தால் தாயினது தட்டுத்தான் தாழ்ந்திருக்கும்.

03. ஒரு சமுதாயத்தின் எதிர்காலமே தாய்மார்களிடம் குடிபுகுந்து கொண்டிருக்கிறது. பெண்களால் உலகம் அழியும் என்றால் தாய் ஒருவளாள்த் தான் அதை தடுத்து நிறுத்த முடியும்.

04. சொர்க்கமானது அன்னையின் பாத அடியில் கிடக்கிறது.

05. உலகத்திலுள்ள ஒரே ஒரு புனிதமான வடிவம் தாய் மட்டும் தான்.

06. கடவுள், தான் எங்கும் இருக்க முடியாது என்பதற்காகவே தாயைப் படைத்தான்.

07. தாயின் அன்பை வெளியிட உலகத்தில் எந்த மொழியிலும் போதிய வார்த்தைகள் இல்லை.

08. தாயின் இருதயம் தான் குழந்தையின் முதற்பள்ளி.

09. அழகிய சிரிப்பை விட தாயின் கண்ணீர் வலிமையானது.

10. தாய் என்பது தான் பெண்களின் மிக முக்கியமான அணிகலன்

P. M. F. Reefath-11A



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

01. பணத்தை நாம் வீடுகளுக்குள் அனுமதிக்கலாம். ஆனால் இதயங்களுக்குள் அனுமதிக்க கூடாது.

02. நம்மிடம் அன்பு ஊற்றெடுக்குமேயானால் இறைவனிடம் இருக்கின்ற அன்பை உணரமுடியும்.

03. நல்ல மனிதனின் இதயம் இவ்வுலகில் ஆண்டவனின் ஆலயமாகும்.

04. சொர்க்கம் தாயின் இருபாதங்களுக்கும் அடியில் இருக்கின்றது

05. நோய் இல்லை என்று மனதில் உறுதி செய், மனம் போல் உடல் அமையும்.

06. மலையளவு உபசாரம் செய்யாதே, கடுகளவு அபகாரம் செய்யாதே.

07. எதற்கும் தயாராக இருக்க வேண்டும், ஒரு நாள் நமக்கான வாய்ப்பு வரும்

08. குனிவதால் எழுத்துக்கள் நிமிரும், பணிவதால் வாழ்க்கை உயரும்.

09. அடுத்தவர் விருப்பத்திற்குத் தான் வாழ வேண்டும் என்றால் செத்துவிடு

10. வழிபாடு செய்யுங்கள் கடவுளுக்கு அருகில் நீங்கள் செல்லலாம், ஆனால் சேவை செய்யுங்கள் கடவுள் உங்கள் அருகில் இருப்பார்.

M. Pavithra 11A



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னைக் கவர்ந்த கணித அறிஞர் பைதகரஸ்

இவர் கிரேக்க தேசத்தைச் சேர்ந்த மெய்யியலாளரும் கணித அறிஞரும் ஆவார்.

கேத்திர கணிதத்தில் இடம் பெற்றுள்ள பைதகரசின் தேற்றம் இவருடையதே ஆகும். அதாவது ஒரு செங்கோண முக்கோணத்தின் செம்பக்கத்தை கொண்டு அமைக்கப்படும் சதுரத்தின் பரப்பளவு மற்றைய இரு பக்கங்களைக் கொண்டு அமைக்கப்படும் சதுரங்களின் பரப்பளவின் கூட்டுத் தொகைக்கு சமனாகும் என்பதே பைதகரசின் தேற்றமாகும்.

இவருடைய கருத்துக்களில் எண்கள் பற்றிய விடயம் முதன்மை பெறுகின்றது. எண்களே யாவற்றிக்கும் அடிப்படை மூலம் எனக் குறிப்பிட்டவர். அத்துடன் ஒவ்வொரு எண்ணுக்குரிய குணாதிசயங்கள் பற்றியும் எடுத்துகாட்டினார்.

இவர் ஓர் ஆன்மீக வாதியாகவும் காணப்பட்டார்.

வானியல் சம்பந்தமான கருத்துக்களை முன் வைத்தார். இவரது வானியல் கருத்துக்கள் கொப்பனிக்கஸ் வானியல் ஆராய்ச்சிக்கு ஓர் உந்து சக்தியாக விளங்கிற்று. இவர் பகல் ஏற்படுவதற்கு நெருப்பை சுற்றி பூமி வலம் வருவதே காரணம் என பைதகரஸ் நம்பினார்.

சங்கீதத்திற்கும் கணிதத்திற்கும் இடையேயுள்ள தொடர்புகள் பற்றியும் இவர் எடுத்து காட்டினார்.

ஆக்கம்

**செல்வி. ஏ. ரக்சினி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலை நினைவலைகள்

மறக்கவே முடியாத
எழில் மிகு நினைவலைகளால்
இன்று நான் உலாவுகிறேன்
உவெஸ்லியின் மத்தியில்!

ஆல மர நிழல் தனில்
நண்பர்கள் குழாமாய் சேர்ந்து
கதைத்த கதைகளின் ஞாபகங்கள்
இன்று என் நினைவினில்!

அரட்டை அடித்துத் திரிவதும்
அதிபரை கண்டால் நடிப்புடன் - இந்த
பூனையும் பால் குடிக்குமா என்பது
போல் இருப்பதும்
இன்று என் நினைவில்!

நண்பர்களுடன் சேர்ந்து செய்தகுறும்புகளும்
அறியாத்தனமாய் தவறு செய்து
தவறை உணர்ந்த ஞாபகங்களும்
இன்று என் நினைவில்!

பதினொரு வருட கற்றலில்
என் வாழ்வோடு இணைந்த
ஆசிரியர்கள், என் நண்பர்கள்
என்றும் நினைவில்!

காலத்தின் கட்டாயத்தால்
நாங்கள் பிரியப் போகிறோம்
என்ற செய்தி கேட்டு உவெஸ்லியின்
மடியில் கண் கலங்கிய நிமிடங்கள்
என்றும் என் நினைவில்!

G. காஞ்சனா தில்ருக்ஷி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய உலகில் சமூக வலைத்தளங்களின் பங்கு

இன்றைய அதி நவீன தொழிநுட்ப உலகில் ஸ்மார்ட் கையடக்கத் தொலைபேசியின் பாவனை இன்றியமையாதது ஆகும்.

இவ்வாறான ஸ்மார்ட் கையடக்கத் தொலைபேசிகளினால் சமூக வலைத்தளங்களான முகப்புத்தகம் (Face Book), Twitter, Inste Gram போன்றன மக்கள் மத்தியில் மிகவும் பிரபல்யமடைந்துள்ளன.

இவ்வாறான சமூக வலைத்தளங்களினால் பல்வேறு நன்மைகள் மக்களுக்கு கிடைக்கின்ற போதிலும் குறிப்பிடத்தக்களவு தீமைகளும் கிடைக்கின்றன.

சமூக வலைத்தளங்களானது ஒருவர் இன்னொருவருடன் தொடர்புகளை வைப்பதற்காக ஆரம்பிக்கப்பட்டபோதிலும் அது பிற்காலத்தில் தனி நபரின் சுதந்திரத்துக்கு பல்வேறு பாதிப்புகளை ஏற்படுத்தியுள்ளது.

உதாரணமாக ஒரு தனிப்பட்ட நபர் ஒரு முகப் புத்தகக் கணக்கில் தனது தனிப்பட்ட விபரங்களையும் புகைப்படங்கள் போன்றவற்றையும் பதிவிட்ட பின்பு அவ்வாறான தனிப்பட்ட விபரங்கள் மற்றும் புகைப்படங்களையும் தங்களது நோக்கத்திற்காக பயன்படுத்திய சந்தர்ப்பங்கள் பல நிகழ்ந்துள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே சமூக வலைத்தளங்களானது மக்களுக்கு தொடர்பாடலுக்குரிய பல நன்மைகளை வழங்கி இருந்தாலும் அதில் பல தனி நபர் சுதந்திரங்களை மீறும் வகையில் தற்காலத்தில் காணப்படுகிறது.

எனவே சமூக வலைத்தளங்களை பாவிக்கும் போது முறையான அவதானத்துடனான பல முன் ஏற்பாடுகளுடன் பாவிப்போமாயின் அதிலுள்ள நலன்களை அனுபவிக்கலாம்.

G. **சுபர்ணிகா**
11A

# மூன்றெழுத்தில் வாழ்க்கை

*உலகில் உள்ள உயிர் மூன்றெழுத்து*
*உயிரை இயக்கும் சக்தி மூன்றெழுத்து*
*சக்தியின் வடிவம் அன்னை மூன்றெழுத்து*
*அன்னை காட்டும் அன்பு மூன்றெழுத்து*
*அறிவை வளர்க்கும் பள்ளி மூன்றெழுத்து*
*பள்ளியிற் கற்கும் கல்வி மூன்றெழுத்து*
*கல்வியால் உருவாகும் பதவி மூன்றெழுத்து*
*பதவியை சிறப்பிக்கும் இளமை மூன்றெழுத்து*
*இளமை தரும் மணம் மூன்றெழுத்து*
*மணத்தால் இணையும் மனைவி மூன்றெழுத்து*
*மனைவியால் உருவாகும் மழலை மூன்றெழுத்து*
*மழலைக்கு செலவாகும் பணம் மூன்றெழுத்து*
*பணத்தைத் தேடும் கைகள் மூன்றெழுத்து*
*கைகள் சேரும் முதுமை மூன்றெழுத்து*
*முதுமையின் பின் தேவைப்படும் பெட்டி மூன்றெழுத்து*
*பெட்டியில் அடங்கும் பிணம் மூன்றெழுத்து*
*பிணம் எடுத்து செல்லும் இடம் மூன்றெழுத்து*
*சுடலையில் வைக்கும் கொள்ளி மூன்றெழுத்து*
*கொள்ளியில் எரித்த அஸ்தி மூன்றெழுத்து*
*அஸ்தியை கரைக்கும் கடல் மூன்றெழுத்து*

D. Mithusha - 11A



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு வயதினிலே!

சின்னஞ் சிறு வயதினிலே ஆரம்பித்த
எனது பள்ளிக்காலம் மறக்க
முடியாத சில நிகழ்வுகள்
கல்லில் எழுதிய எழுத்துப் போல்
ஆழமாக பதித்துள்ள ஞாபகங்கள்

தினமும் நேர்த்துடன் வநது அதிபரிடம்
ஆசீ பெற்று கைகுலுக்கிய ஞாபகம்
வகுப்பறைக்கு முன்னால் நண்பர்களின்
ஆரவாரமான வரவேற்பு மூட்டம்
அதைக் கண்டவுடனே ஒரு வித பெரு மகிழ்ச்சி

ஆசிரியரைக் கண்டால் பதுமையாக
மாறும் சக நண்பர்கள். ஆசிரியர்
இல்லாத போது வகுப்பறையில் விளையாடி
வேதனைப்பட்ட பல நாட்கள் பாட வேளைகளில்
வெளியில் சென்று ஒழித்த நாட்கள்

இனிமையான நட்புகளுடன் மனம் விட்டுப் பேசி
குலுங்கிச் சிரித்த தருணங்கபல
நட்பையும் மீறி நெருங்கிய உறவான சில மனங்கள்
அதிக அன்புக்காக ஏங்கிய போது அதே அன்பால்
அநாதையாக தவிர்த்த தருணம்.

**வெ. வதனன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நண்பனே!

எம் கல்லூரி பயணத்தில்
இறுதி நாட்களில்
எனக்காக எழுதிய
உனது பக்கங்களை
சில நாட்கள் கழித்து
நான் வாசிக்கும் போது
அழகிய நினைவுகளை
எனக்கு பரிசளிக்கின்றாய்
இதழோரம் மலரும் புன்னகையும்
இமையோரம் கண்ணிற் துளியும்
உன் பரிசின் அடையாளங்கள்
பக்கங்களை படித்து முடித்ததும்
உன் இன்மையை உணர்கிறேன்.

R. Kishalika - 11D



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெறும் புத்தகப் புழுவாய்
இருந்து விடாமல்
யதார்த்த வாழ்வின்
நடைமுறைச் சிக்கல்களையும்
மனித மனதின் முரண்பாடுகளையும்
என்றும் எமது பள்ளிக்கூடம்
எமக்குக் கற்றுத் தருகின்றது.

நாம் எல்லோரும் ஒரு காலத்தில்
சந்தோசப் பறவைகளாகவும்
நட்பு பறவைகளாகவும்
சுதந்திரப் பறவைகளாகவும்
குடியிருந்த நினைவுக் கூடம்

நம்மைப் போன்ற மாணவர்களுக்கு
சொர்க்கம் என்பது எமது பாடசாலை
நாட்களும், அங்கு வாழ்ந்த
காலங்களுமே.

K. Kirishalini - 11D



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாய்

புது விதை ஒன்று
துளிர் விட்டது
அது புவியில் பூத்திட
இவள் மனம்
ஆசை கொண்டது

உன் அசைவுகளை
இவள் அறிவாள் . . .
நீ உதைக்கும் போது
இவள் சிரிப்பாள்.!

புகையில்லா
இதம் தந்தவள்
உன் இம்சைகளை
தாங்கிக் கொண்டவள் . . .



சுமக்கும் போது
உன்னை சுமையாய்
நினைப்பதில்லை . .
வளர்க்கும் போது
உனக்கு வலிகளை
கொடுப்பதில்லை.

வலிகளைச் சுமந்து
வாழ்க்கையை
கொடுக்கிறாள்.
வளர்ந்தவனான நீ,
வயதானவள் என
வதைக்கிறாய்.

T. Anoja - 11D



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரீட்சையை எதிர் கொள்வது எவ்வாறு?

நீண்டகாலமாக எதிர்பார்த்திருந்த க. பொ. த (சா/த) பரீட்சை இன்னும் சொற்ப காலத்தில் வந்தடைக்கின்றது. ஆகவே நாம் கவனம் செலுத்தி அதிகூடிய புள்ளிகளைப் பெற்று சித்தியடைய வேண்டும்.

இச்சந்தர்ப்பத்தில் மாணவர்கள் கைகொள்ள வேண்டிய அம்சங்கள்

01. கற்பதற்கான சிறந்த சூழலைத் தெரிவு செய்தல்

வழமைபோல் பாடங்களை மீட்டுவதற்கும் குறிப்புகளை எடுப்பதற்கும் சந்தடிகள் அற்ற பிறரின் தொல்லைகள் இல்லாத, காற்றோட்டமும், போதிய வெளிச்சமும் உள்ள சௌகரியமான இடத்தை தெரிவு செய்ய வேண்டும்.

கையடக்கத் தொலைபேசி, தொலைக்காட்சி, பேஸ்புக், வட்ஸ் அப், சக நண்பர்களுடனான வீண் அரட்டை, இரவில் சுற்றித்திரிதல் மற்றும் பண்பாடற்ற இன்னோரன்ன விடயங்களில் இருந்து முற்றாக தவிர்த்திருத்தல் வேண்டும்.

02. மீட்டல்

பரீட்சைக்கு தயாராக வேண்டிய பாடங்களை எவ்வாறு மீட்டுக் கொள்ளலாம் என ஒரு திட்டத்தை வகுத்துச் செயற்பட வேண்டும். ஒவ்வொரு நாளும் நடுத்தர வேகத்தில் பாடங்களை மீட்டுக் கொள்ள வேண்டும். ஒவ்வொரு 50 நிமிடங்களுக்கொருமுறை 5 அல்லது 10 நிமிடங்களுக்கு ஓய்வெடுத்துக்கொள்ள வேண்டும்.

ஒவ்வொரு பாடத்திலும் மீட்ட வேண்டிய தலைப்புகளையும், சிறுதலைப்புகளையும் தனியாக எழுதிக் கொள்ள வேண்டும். கடந்த கால வினாக்களில் நன்கு பரிச்சயம் பெற்றிருக்கும் சந்தர்ப்பத்தில் எதிர்பார்க்கும் வினாக்கள் எப்படி வரக்கூடும் என்பதை ஊகித்திருக்க வேண்டும். மாதிரி வினாக்களை உருவாக்கி தொடர்ச்சியாக பயிற்சிகளில் ஈடுபட வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

03. ஒரு நேரத்தில் ஒரு பாடத்தில் மாத்திரம் கவனம் செலுத்தல்

பாடங்களை மீட்டல் செய்கின்ற போது ஒரே நேரத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட பாடங்களில் கவனம் செலுத்தக் கூடும் ஒரு பாடத்தை மீட்டும் போது வேறு ஒரு பாடத்தில் இருக்கின்ற ஒரு விடயம் ஞாபகத்திற்கு வருமாயின் அதைப்படிக்க முயற்சிப்பர் இது முற்றிலும் தவறான அம்சமாகும். இதைத்தவிர்த்து குறித்த ஒரு நேரத்தில் குறித்த ஒரு பாடத்தில் மாத்திரம் கவனம் செலுத்துவது சாலப்பொருத்தமானது.

04. மீட்டல் உத்திகளை பயன்படுத்தல்

பாடங்கள் மீட்டிக்கொள்வதற்கென உத்திகளுள்ளன.

உதாரணமாக 1. Floa Chart
2. Mind Mapping
3. Book Mark
4. Mnemonic

Book Marker ஒன்றில் தேவையான தகவல்களை எழுதி அடிக்கடி வாசிக்கும் புத்தகத்தினுள் வைக்கலாம். புத்தகத்தை விரிக்கும் போதெல்லாம் அந்த Book Markre உள்ள தகவல்கள், குறிப்புகள் என்பன அடிக்கடி மீட்டப்படக்கூடியனவாக இருக்கும்.

அதேபோல ,
செவிமடுப்பதன் முலம் மீட்டிக்கொள்வதற்கான உத்திகள்.

முக்கியமான விடயங்களை ஒலிப்பதிவு செய்து கேட்க வேண்டும்.
ஒரு விடயத்தில் வரக்கூடிய முக்கிய சொற்களை சத்தமிட்டுச் சொல்லல்

பிறருக்குக் கற்றுக்கொடுத்தல் பிறரிடம் வினாக்களைக் கேட்குமாறு கூறி அதற்கு விடையளித்தல் உங்களுடைய கருத்துக்களை உற்ற நண்பர்களுடன் பரிமாறிக் கொள்ளல்

05. பரீட்சை வினாக்களை உரிய நேரத்தில் செய்து முடிப்பதற்கான பயிற்சியைப் பெறல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரீட்சைக்கு இன்னுமொரு வாரம் தான் இருக்கிறது என்ன செய்யலாம்?

01. குறுங்குறிப்புக்களை ஒரு நாளைக்கு ஒரு பாடம் என்றபடிமுக்கியமான மீட்ட வேண்டிய பாடங்களை திரும்பவும் மீட்டிக் கொள்ள வேணடும். ஏனைய பாடங்களை ஒரு நாளைக்கு இருபாடங்கள் என்றபடி மீட்டிக்கொள்ளலாம்.

02. பரீட்சை மிக நெருங்கிய நிலையில் சக நண்பர்களுடன் சேர்ந்து கலந்துரையாடுவதை தவிர்த்துக் கொள்ள வேண்டம்.இதனால் மன உழைச்சல் எற்படுவதற்கு அதிக வாய்ப்புக்கள் இருக்கின்றன

இவ்வாறு பரீட்சையை எதிர் கொள்ள முடியுமாக இருந்தால் எந்தவித தயக்கமும் இன்றி வெற்றிப்பாதையைக் கிட்டமுடியும்

H.Lasna Banu
11B



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவேகானந்தர் பொன் மொழிகள்

நீ எதை நினைக்கிறாயோ அதுவாக ஆகிறாய் உன்னை வலிமை உடையவன் என்ற நினைத்தால் வலிமை படைத்தவன் ஆவாய்

ஆனால் சாதிக்க இயலாத காரியம் என்று எதுவும் இருப்பதாக ஒரு போதும் நினைக்காதே

நான் எதையும் சாதிக்க வல்லவன் என்று சொல்ல நீ உறுதியுடன் இருந்தால் பாம்பின் விஷம் கூட சக்தியற்றதாகிவிடும்.

கீழ்ப்படியக் கற்றுக்கொள் கட்டளையிடும் பதவி தானாக வந்து அடையும்

உற்சாகமாக இருக்கத் தொடங்குவது தான் வெற்றி கரமான வாழ்க்கை வாழத் தொடங்குவதற்கான முதல் அறிகுறி.

அடிமைகளின் குணமாகிய பொறாமையை அழித்து விடு

மிருக பலத்தால் அல்லாமல் ஆன்மீக பலத்தால் மட்டுமே எழுச்சி பெற முடியும்.

சுயநலமின்மை சுயநலம் என்பவற்றை தவிர கடவுளுக்கும் சாத்தானுக்கும் எவ்வித வேறுபாடும் இல்லை

நீ செய்த தவறுகளை வாழ்த்து. அவைகள் நீ அறியாமலே உனக்கு வழிகாட்டும் தெய்வங்களாக இருந்திருக்கின்றன.

அன்பின் மூலம் செய்யப்படும் ஒவ்வொரு செயலும் ஆனந்தத்தைக் கொண்டு வந்து தந்து தீரும்.

உங்களால் யாருக்கும் உதவி செய்ய முடியாது. மாறாகச் சேவைதான் செய்ய முடியும்

உனக்குத் தேவையான எல்லா வலிமையும் உதவியும் உனக்குள்ளேயே உள்ளன

**ர. தனுசியா**
11B



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குளுகோமா

குளுகோமா என்பது கண் நீரிழிவு நோய் ஆகும். இந் நோய் ஏற்பட்டு சில மாத இடைவெளியின் பின்னர் கண் முற்றாக பார்வை இழந்து விடும்

இந்நோய் அறிகுறிகளை முன்கூட்டியே அறிந்திருந்தால் கட்டுப்பாட்டில் வைத்திருக்கலாம்.

குளுக்கோமாவானது ஸ்னேக் தீ..ப் ஆ..ப் சைட் என்று அழைக்கப்படுகின்றது.

குளுகோமாவை குணப்படுத்தும் முறைகளில் ஒன்றானது கண்களில் உள்ளே உள்ள அழுத்தத்தை குறைத்துக் கொள்வது அதாவது இண்ட்ராகுலர் ப்ரஷர் (குருடு) ஆகும்.

எமது கண்கள் சைக்ரோசோமர் எனும் சுத்தமான திரவத்தைச் சுரக்கிறது அது கண்களைப் பாதுகாக்கவும் கண்ணின் முன் பக்கத்தில் உள்ள ரிசுக்களுக்கு ஊட்டச்சத்தும் கொடுக்கின்றது சுகாதாரமான கண்களில் இத்திரவம் கண்ணின் மேற்பகுதியிலும், கீழ்பகுதியிலும் உள்ள கால்வாய் போன்ற பகுதியின் மூலம் வெளியேற்றப்படுகின்றது.

ஆனால் குளுகோமா நோயாளிக்கு இத்திரவம் வெளிறேுவதில்லை சைக்ரோ சோமர் ஒன்று சேர்த்து விட்டால் எமது கண்களின் அழுத்தம் அதிகமாகும். இந்த அழுத்தம் அதிகமாகினால் கண்ணின் நரம்பிற்கு அதிக பாதிப்பு ஏற்படும் இப்பாதிப்பின் முடிவுதான் கண்பார்வை இழப்பு.

குளுக்கோமா அறிகுறியை வெளிக்காட்டாத நோய் அதன் பொருள் என்னவென்றால் உங்கள் கண் அழுத்தம் எவ்வளவு அதிகமாக இருந்தாலும் நீங்கள் அறிகுறியை உணரமாட்டீர்கள்.

கண் அழுத்தம் அதிகமாகின்றபோது கண்ணின் பிற்பகுதியில் உள்ள நரம்பு பாதிப்படையும் நரம்பு பாதிப்படைந்தால் எமது பார்வை சிறிது சிறிதாக மங்கி கடைசியில் கண் தெரியாமலேயே போய்விடும். இது எந்தவயதிலும் வரலாம். பொதுவாக 40 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு இந்நோய் ஏற்படும் வாய்ப்பு அதிகம். குடும்பத்தில் யாராவது ஒருவருக்கு வந்திருந்தால் அவர்களுடைய வாரிசுக்கும் வரலாம்.

நீரிழிவு நோய் உயர்குருதியமுக்கம் உள்ளவர்களும் இந்நோய் ஏற்படும் வாய்ப்பு உண்டு. எனவே குளுகோமாவில் இருந்து கண்களை பாதுகாப்போம்.

M.இந்துஜா - 11B



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேராசிரியர் சி. மௌனகுருவும் நாடகமும்

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள சீலாமுனை என்ற சிற்றூரில் வாழ்ந்த சின்னையா - முத்தம்மாள் ஆகியோருக்கு இரண்டாவது மகனாக 09-06-1943 இல் பிறந்தார். அமிர்தகழி மெதடிசமிஷன் பள்ளியில் ஐந்தாம் வகுப்பு வரை பயின்றார். ஐந்தாம் வகுப்பில் புலமைப் பரிசில் பெற்று வந்தாறுமூலையில் உள்ள நடுவன் (மத்திய) கல்லூரியில் பயின்றவர் ஆறாம் வகுப்பு முதல் இறுதிவரை பாடசாலைக்கல்வியை அங்கு பயின்றவர் பள்ளியில் படிக்கும் காலத்தில் நாடகம் நடிப்பதிலும், பேச்சாற்றலில் வல்லவராகவும் விளங்கினார். தலைமை தாங்கும் பண்பு கைவரப் பெற்றிருந்தார்.

தந்தையார் சிற்றூர் புறக் கலைகளில் ஈடுபாடு கொண்டவராக விளங்கியதால் மௌனகுரு அவர்களுக்கும் இக் கலைகளில் ஈடுபாடு இயல்பாகவே இருந்தது. பேராதனைப் பல்கலைக் கழகத்தில் இளங்கலை (HONEST) (1961 - 65) முதுகலை (1970-13) பட்டம் பெற்றவர். கொழும்பில் உள்ள இலங்கைப் பல்கலைக் கழகத்தில் கல்வியியல் பட்டமும் யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தில் முனைவர் பட்டமும் பெற்றவர்.

(1966-1970) வரை ஆசிரியர் பணிபுரிந்த மௌனகுரு அவர்கள் (1971-1975) வரை கொழும்பில் பாடநூல் எழுதும் பொறுப்பில் இருந்தார். யாழ்பாணம் பலாலியில் அமைந்துள்ள ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் விரிவுரையாளராக பணிபுரிந்த இவர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நுண்கலைத் துறையில் துணை விரிவுரையாளராக பணிபுரிந்தார். பின்னர் முதுநிலை விரிவுரையாளராகப் பணி உயர்வு பெற்று (1989 - 1991) வரை பணிபுரிந்தார்.

1991 ஆம் ஆண்டு கிழக்குப் பல்கலைக் கழகத்தின் நுண்கலைத் துறையில் முது நிலை விரிவுரையாளராக பணி புரிந்தார். நுண் கலைத்துறையின் தலைவராகவும், கலைப்புல முதன்மையராகவும் திறம்படப் பணி புரிந்துள்ளார் 1997 ம் ஆண்டு கிழக்குப் பல்கலைக்கழகத்தின் பொறுப்புத் துணைவேந்தராகவும் பணி புரிந்தவர் அதன் பிறகு கலைப் புலத் தலைவராக தொடர்ந்து பணி புரிந்து ஓய்வு பெற்றவர். சுவாமி விபுலானந்தரின் இசைக் கல்லூரியின் ஒருங்கிணைப்பாளராகவும் பெருமையுறப்பணி புரிந்தவர் யாழ்ப்பாணத்தில் பதினேழு ஆண்டுகளும் பணிபுரிந்த சி. மௌனகுரு மிகப் பெரிய சாதனைகளைத் தாம் சார்ந்த துறையில் நிகழ்த்தியுள்ளார். இலங்கையில் வாழும் தமிழர்கள் மொழியால் இனத்தால் ஒன்று பட்டவர்களாக இருந்தாலும் கலை, பண்பாடுகளுக்கிடையே வேறுபாடுகளைக் கொண்டவர்கள் மாவட்டத்துக்கு மாவட்டம் வழிபாடு,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சடங்குமுறைகள், பண்பாட்டில் வேறுபாடு உண்டு அவர்களுக்கும் தனித்த அடையாளங்கள் உண்டு. இவற்றையெல்லாம் உள் வாங்கிக் கொண்டு தம் ஆய்வுகளை நிகழ்த்தியதுடன் இலங்கையின் பெரும்பான்மை இனமான சிங்கள மக்களிடம் உள்ள கூத்துக்கள், நாடகங்கள் பற்றிய பேரறிவும் மௌனகுருவுக்கு உண்டு அதுபோல் தமிழகத்திலும் இந்தியாவின் பிற பகுதிகளிலும் வழங்கப்படும் கூத்து, நாடக மரபுகளை அறிந்தவர்.

மௌனகுரு இலங்கைத் தமிழர்கள் பயன் பெறும்படி பல கூத்துக்களை நிகழ்த்திக் காட்டியுள்ளார். பல நாடகங்களை அரங்கேற்றியுள்ளார் பல நாடகங்களை எழுதி வழங்கியுள்ளார். நாடகம், கூத்துத் தொடர்பிலான பல நூல்களை எழுதியுள்ளார். தொன்மம் (புராண) பழங்கதை (இதிகாதும்) சார்ந்த பல கதைகளை நாடகமாக கூத்துக்களாக அரங்கேற்றியுள்ளார். சி. மௌனகுரு குழந்தைகளுக்காக பல நாடகங்களை உருவாக்கி நடத்துவார். இதில் "தப்பி வந்த தாடி ஆடு" என்ற நாடகம் புகழ்பெற்ற நாடகமாகும் இந்த நாடகம் கல்வி நிறுவனங்களில் இவருக்கு நல்ல புகழை ஈட்டித்தந்ததுடன் பல உயர் பரிசில்கள் கிடைக்கவும் வழி வகுத்தது

ஆதிச்ச நல்லூரில் பேராசிரியர் மௌனகுரு செய்த பல நாடக கலை இலக்கிய முயற்சிகளுக்கு எதிர்ப்புகள் அவ்வப்பொழுது கிழம்பி அடங்கியுள்ளது என்பதனையையும் அறிய முடிகின்றது. இவரது படைப்புக்களாக புத்துயிர்ப்பு, மழை, தப்பி வந்த தாடி ஆடு சரிபாதி வேடனும் புறாக்களும், சக்தி பிறக்குது நம்மை பிடித்த பிசாசுகள், ஒரு முயலின் கதை, ஒரு உண்மை மனிதனின் கதை கலையில் உயிர்க்கும் மனிதன், புதியதொரு வீடு, பரதமும் கூத்தும் கண்ணகி குளிர்த்தி என்பனவாகும்.

மௌனகுரு கூத்து, நாடகம் இவற்றை வகுப்பறைகளுடன் நிறுத்திக் கொள்ளாமல் பல்வேறு பயிலரங்குகள் நடத்தி மாணவர்களுக்கு பயிற்று வித்துள்ளமை குறிப்பிடத்தக்க ஒன்றாகும். மௌனகுரு அவர்களின் நாடகங்களுள் குறிப்பிடத்தக்கது இராவணேசன் நாடகம் ஆகும். இவ்வாறு பல நாடகங்களை இயற்றியுள்ளார். மௌனகுரு அவர்களின் நாடக புலமை இவருக்கு தேசிய அளவில் பரிசில்கள் பலவற்றை வாங்கித் தந்துள்ளது. குழந்தைகளுக்கான நாடகம் உருவாக்கியமையும் இலக்கிய ஆராய்ச்சிக்கும் நாடக அரங்கப் பணிக்காகவுமென பலமுறை பரிசு பெற்றுள்ளார். பல்வேறு பல்கலைக் கழகங்கள் அனுப்பும் முனைவர் பட்ட ஆய்வேடுகளை மதிப்பீடு செய்யும் அயல் நாட்டு தேர்வாளராகவும் பணிபுரிந்துள்ளார். இலங்கைப் பல்கலைக்கழகம் சார்ந்த பல்வேறு கல்விக் குழுக்களிலும் இணைந்து பணிபுரிந்துள்ளார் தமிழ் நாடகம், கூத்து வரலாற்றில் என்றும் நின்று நிலவும் பெயராகவே மௌனகுரு அவர்களின் பெயர் விளங்கும்.

**P.சாவித்தியன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மெழுகுவர்த்தி . . .

"ஐயா, நல்லம்மாவின் உடல் நலம் மிகவும் மோசமாகிக் கொண்டே போகின்றது வைத்தியசாலையில் அனுமதிப்பதுதான் நல்லம்" இது நல்லம்மாவை பராமரிக்கும் பெண் வயோதிப இல்ல தலைவரிடம் அன்று காலையில் கூறியது.

நல்லம்மா, அவளின் பெயர், பெயருக்கு ஏற்ப அவள் ஒரு நல்ல தாய் என்று உற்றார் உறவினரிடையே பெயர் எடுத்திருந்தாள். அவளுக்கு இரண்டு ஆண் பிள்ளைகள். அவர்கள் தான் அவளின் உலகம்.காரணம், அவளது முப்பத்தைந்து வயதிலே அவள் கணவன் இறைவனடி சேர்ந்து விட்டான். அப்போது நல்லம்மாவின் பிள்ளைகளுக்கு வெறும் பன்னிரெண்டு வயதும், ஒன்பது வயதும் தான் இருக்கும். பிள்ளைகள் ஒழுங்காக படித்து உயர்ந்த நிலைக்குவந்தால் மட்டுமே நாம் சமூகத்தில் இருக்கத் தகுதி உடையவர்கள் ஆவோம் என்பது நல்லம்மா நன்கு அறிந்த விடயம். ஏனெனில், அவள் கணவன் இருந்த போது அவளுக்கு எந்தக்குறையுமில்லை. உறவினர்களுக்குக் கூட....கணவன் இறந்த பின் "ஒரு வாய் உணவு உண்டீர்களா?" எனகேட்ககூட நாதி இல்லை. ஆனால் அவளது அம்மா கௌரி மட்டும் அவளுக்கு கொஞ்சம் துணையாய் இருந்தாள்.

பிள்ளைகளை படிப்பிக்க வேண்டும் என்ற மன உறுதியுடன் இருந்த நல்லம்மா தன்னை சுதாகரித்துக் கொண்டாள். தன்நம்பிக்கையோடு எழுந்தாள். தன் தாயிடம் பிள்ளைகளை பராமரிக்கும் பொறுப்பை ஒப்படைத்து விட்டு வீட்டுச்சுமையை தாங்கும் பொறுப்பை தான் எடுத்துக் கொண்டாள். அவளது கல்வித் தகைமைக்கு ஏற்ற வகையில்தான் வேலை கிடைத்தது. அதில் கிடைக்கும் சம்பளத்தைக் கொண்டு தான் இரு பிள்ளைகளையும் எவ்வித இடையூறும் இன்றி, அவர்களது தேவைகளையும் நிறைவேற்றி படிக்கவும் வைத்தாள்.

பிள்ளைகள் வளர வளர அவர் அவர்களது தேவைகளும் அதிகரித்துக் கொண்டே சென்றது. அதே போல அவளது வேலைச்சுமையும் அதிகரித்துச் சென்றது.பிள்ளைகளின் எதிர்காலத்துக்காக தன்னை ஒரு மெழுகுவர்த்தியாக மாற்றிக் கொண்டு, உணவு உட்கொள்ளக்கூட நேரமின்றி உழைக்கத் தொடங்கினாள்.பிள்ளைகளுக்கு உணவு ஊட்டுவதிலும், அவர்களை முன்னேற்றுவதிலும் மும்முரமாக ஈடுபட்டாள். நல்லம்மாவின் கனவு பொய்க்கவில்லை. அவர்கள் இருவருமே கல்வியில் மேன்மையானவர்களாக விளங்கினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலங்கள் உருண்டோடின, இருவருமே பல்கலைக்கழக படிப்பை முடித்து ஒருவர் இரசாயணவியல் பட்டதாரியாகவும், மற்றவர் விவசாயவிஞ்ஞான பட்டதாரியும் ஆகினார்.

நல்லம்மா மிகுந்த களிப்புற்றிருந்தாள். அவளின் மனதில் எவ்வளவு மகிழ்ச்சி இருந்ததோ, அதே அளவு அவளது உடம்பில் நோய் இருந்தது. ஏனெனில்நல்லம்மா தொடர்ச்சியான உழைப்பால் உடல் தளர்ந்து இருந்தாள். நல்லம்மாவிற்கு அயலவர்கள் ஆலோசனை கூறினர். "நல்லம்மா இவ்வளவு காலமும் நீ கஸ்டப்பட்டதெல்லாம் போதும் உண்ட பிள்ளைகள் நீ கனவு கண்டது போல உத்தியோகம் பாக்கத் தொடங்கிட்டனுகள். இரண்டு பேருக்கும் நேரகாலத்தோட கலியாணம் கட்டி வைச்சிட்டு நீயும் பெரியவன்ட இல்லாட்டி சின்னவன்ட வீட்டில இருக்கிற வழியப்பாரு இன்னும் கஸ்டப்படாம" இது நல்லம்மாவின் அம்மா கௌரி சொன்னவார்த்தைகள் அவளுக்கும் அதுதான் சரியெனப்பட்டது.

இருவருக்கும் ஏற்ற இடங்களைப் பார்த்து நல்லம்மா திருமணம் செய்து வைத்தாள். பெரியவனுக்கு வெளிநாட்டுச் சம்மந்தம் ஆனபடியினால் அவன் தனது மனைவியுடன் வெளிநாடு சென்றுவிட்டான். இளைய மகன் இங்கேயே திருமணம் முடித்தபடியால் நல்லம்மா இளையவனோடேயே தனது இறுதிக் காலத்தை கழிக்க விரும்பினாள். இளையவனுக்கும் இதுதான் ஆசையாக இருந்தது. மூத்தவனும் இதையே தான் விரும்பினான்.

ஆனால் விதியோ, வேறு விதமாக விளையாட திட்டம் போட்டிருந்தது. இளைய மகனின் மனைவி பெரும் செல்வந்த வீட்டிலிருந்து வந்தவள். அவள் அதனால் வீட்டு வேலைகள் எதுவும் செய்வதில் நாட்டம் காட்டவில்லை.இது நல்லம்மாவிற்கு கொஞ்சம் கஷ்டமாக இருந்தது. எனினும் மகனிற்கு சமைத்துக் கொடுப்பதில் எந்த தாய்க்குத் தான் விருப்பம் இல்லாமல் இருக்கும்? ஆனால் அவளின் மருமகளோ அடிக்கடி குறையாக கூறிக்கொண்டே இருப்பாள் இதனால் மகனுக்கும் மருமகளுக்குமிடையில் முறுகல்கள் வர ஆரம்பித்தது. இதனால் நல்லம்மா வீட்டைவிட்டு வெளியேறினாள். அவள் போவதற்கு இடமுமில்லை, தனியே உழைக்க உடலில் சக்தியில்லை, தன் மகன்களை ஆளாக்குவதற்கு அவள் பட்ட கஷ்டங்களும், தவிர்ந்த உணவு வேளைகளும் அவளது முதுமைப் பருவத்தில் சரியாகத் தாக்கின.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனால் அவள் ஒரு வயோதிப இல்லத்தில் சேர்க்கப்பட்டாள். இவளை பராமரிக்க ஒரு பெண் அமர்த்தப்பட்டாள். அவளை அங்கு சென்று பார்ப்பதற்குக் கூட யாருமில்லாமல் இருந்தது. காரணம், இளையவன் மனைவியின் பேச்சுக்கு கட்டுண்டு தன் தாயை பார்க்க முடியாமல் திண்டாடினான். மூத்தவனுக்கு இவை எதுவுமே தெரியாது.
நல்லம்மா தனது படுக்கையில் இருந்தபடியே கடவுளை வேண்டுவாள். "கடவுளே எண்ட இரண்டு பிள்ளைகளும் நல்லாயிருக்க வேண்டும். அது ஒண்டுதான் நான் உன்னிடம் வேண்டுவது" நல்லம்மாவின் வாழ்க்கை அம்முதியோர் இல்லத்தில் கரைந்தது. ஒரு நாள் நல்லம்மா கடுமையான சுகயீனம் உற்றாள். உடனடியாக பணிப்பெண்ணின் தகவலுக்கமைய வைத்திய சாலையில் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டாள். இரு மகன்களுக்கும் அறிவிக்கப்பட்டது. தகவல் அறிந்த இருவருமே மின்னல் வேகத்தில் வைத்திய சாலைக்கு வந்தனர்.

இருவரும் தம் தாயைக் காண்பதற்கு பதறியடித்தபடி நின்றிருந்தனர். அவர்கள் தம்மைப் பெற்று, கடினப்பட்டு வளர்த்த தம் தாய் அவசர சிகிச்சைப்பிரிவில் அனுமதிக்கப்பட்டது தம்மால் தான் என எண்ணி மனம் வெதும்பினர். இறுதியில் நல்லம்மாவைப் பார்க்க இருவருக்கும் அனுமதி கிடைத்தது. உடனே ஓடிச் சென்ற இருவருக்கும் ஒரு அதிர்ச்சி காத்திருந்தது. அங்கே.... நல்லம்மா..... தனது பிள்ளைகளுக்காக மெழுகுவர்த்தி போல உருகி உழைத்து அவர்களை மேம்படுத்திய அத்தாய் மீளாத்துயில் கொண்டுவிட்டாள். பிள்ளைகள் இருவருமே தம்தாயைக் கண்டவுடன் வார்த்தைகள் எதுவுமற்றவராய் ஆயினர். கண்களில் நீர் அருவியாக ஓடியது அம்மா...... அம்மா....

**லிங்கேஸ்வரன் அயட்ஷா** - 11E



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலநிலை மாற்றத்தின் பாதகமான தாக்கத்தினை தணிப்பதினை இலக்காகக் கொண்டும் காலநிலை மாற்றத்தின் ஓசோன் படையினை தேய்வடையச் செய்யும் பதார்த்தங்கள் தொடர்பான மொன்றியல் சமாயத்திற்கான கிகாலி திருத்தத்தில் பூகோள வெப்பத்தை பேணுவதற்கும் இரண்டு பாகை செல்சியஸ் நிலையில் பேணுவதற்கும் இது சட்டரீதியான ஒரு ஊன்று கோலாகும். இதற்கு பாரிய உண்மையான பங்களிப்புக்கள் பல காணப்படுகின்றது என சுற்றாடல் வல்லுநர்கள் குறிப்பிட்டு உள்ளனர். அந்த வகையில் பின்வருவன செல்வாக்கு செலுத்துகின்றன. அதனை ஒவ்வொன்றாக சற்று ஆராய்வோம்.

1. காலநிலை மாற்றத்தை தணிப்பதற்கான இன்னுமொரு பூகோள அர்ப்பணிப்பு :

காலநிலை மாற்றத்தினை தணிப்பதற்காக (HCFCS) மற்றும் குளோரோ புளோரோகாபன் (CFCS) பதார்த்தங்களின் பயன்பாட்டிற்கு பதிலாக தற்பொழுது (HFCS பயன்படுத்தப்பட்டு வருகின்றது. எனினும் அவை செறிவு வாய்ந்த பச்சை விட்டு வாயுக்களாகும். கிகாலி நிருத்தத்துடன் பூகோள வெப்பமடைவதற்கு எதிரான மிகவும் செறிவான செறிவு வாய்ந்த கருவியாக மொன்றியல் சமவாயம் தொழிற்படும் இந்த திருத்தங்கள் செயல் வலுப் பெறும் 2047 ஆம் ஆண்டளவில் (HFC) நுகர்வினை 80% சதவீதத்தினால் குறைப்பதே இதன் இலக்காக உள்ளது.

இதன் இலக்குகளை மேலும் மேலும் பெறுவதற்கு சட்டரீதியாக கட்டுபடுவதற்கு சகல நாடுகளும் அர்ப்பணிப்பு செய்துள்ளன. இதன் இறுதி செயற்பாடாக அபிவிருத்தியடைந்த நாடுகளில், ஆசிய நாடுகள், ஆபிரிக்க நாடுகள், இலத்தின் அமேரிக்கா போன்ற நாடுகள் 2024 ஆம் ஆண்டளவில் (HFC)வாயுக்களின் பயன்பாடு குறைக்கப்பட்டு புதியதோர் காலநிலை மாற்றத்தை தணிப்பதற்கான இன்னுமொரு பூகோள அமைப்ப 2028 ஆம் ஆண்டளவில் உருவாகும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

2. அறிவை பெற்றுக்கொள்வதற்காக கட்டாயம் கற்றல் வேண்டும் ஆனால் திறன்களைப் பெற்றுக் கொள்வதற்காக கட்டாயம் பயிற்சி பெறுதல் வேண்டும்.

குளிர்சாதன: காற்று சீராக்கி சேவைத்துறையில் ஒடிஎஸ் நுகர்வினை "ஓசோன் படை தேய்வடைய செய்யும் பதார்த்தங்கள் obs" குறைத்து கொள்வதற்கான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முழுமையான அணுகு முறையின் ஒரு பகுதியாக குளிர் சாதனங்கள்/ காற்று சீராக்கிகள் மூலம் பெறப்படுகின்றன. மற்றும் DNPU-UNEP உடனான உசாவுகையுடன் நிகழ்ச்சி திட்டங்களின் அமுல்படுத்தல் ஒருங்கிணைக்கப் படுகின்றனர். மீட்டல் மீள் பயன்படுத்தல் மற்றும் மீள கோரல் தொழில் நுட்பத்தின் ஊடாக சிறந்த பராமரிப்பு செயன்முறைகளின் திறன்கள் மேம்படுத்தல் இலங்கை தொழில்பயிற்சி அதிகாரசபை பயிற்சி நிலையம் அநுராதபுரத்தில் 2418 மார்ச்- 20-22 ஆம் திகதிகளில் குளிர்சாதனம் தொடர்பான சிறந்த செயற்பாடுகள் தேசிய ஓசோன் அலகினால் செயலமர்வொன்று நடாத்தப்பட்டுள்ளது.

3. சுங்க அலுவலர்களுக்கான இயலளவு மேம்பாட்டு செயலமர்வு -

இலங்கை சுங்கத்தின் ஒத்துழைப்புடன் தேசிய ஓசோன் அலகினால் 2018 மார்ச் 13ம் திகதி பயிற்சி நிகழ்ச்சி திட்டமொன்று நடாத்தப்பட்டது. ODC பதார்த்தங்களின் தடை செய்யப்பட்டவைகளின் இறக்குமதியை கட்டுப்படுத்தல், கண்டுபிடித்தல் மற்றும் இவ்வாறான பதார்த்தங்களின் சட்ட முறையான வர்த்தகத்தை தடை செய்தல் கண்காணிப்பு செய்வதற்கும் சுங்க அலுவலர்களுக்கு முகாமைத்துவத்தை வழங்க இந்த செயலமர்வின் நோக்கமாகும். மேலும் மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைப்புக்களுக்கிடையிலான ஒருங்கிணைப்பினை பேணல் இதன் நோக்கமாகும்.

3. சிறிது சிறிதாக அறிவைப் பெறுதல் விழிப்பூட்டல் நிகழ்ச்சி திட்டங்கள்-

ஓசோன் படையின் தேய்வினை பாதகமான விளைவுகளிலிருந்து தவிர்த்தக் கொள்வது தொடர்பில் பொது மக்களின் அறிவு மந்த நிலையை ஈடு செய்வதற்கான ஆர்வம் மற்றும் ஒத்துழைப்பு சுய இயக்கத்தை ஊக்குவித்தல் ஓசோன் விஞ்ஞான தொடர்பில் விழிப்பூட்டல் முக்கியமாக உள்ளது. பிரதானமாக பாடசாலை பிள்ளைகள், ஆசிரியர், படையினர், பொலிஸ் மற்றும் அரச அலுவலர்கள் ஏசி.·.குளிர்சாத உபகரண இறக்குமதியாளர்கள் போன்றோரை வைத்து கருத்தரங்குகளை நடாத்துதல், துண்டுபிரசுரங்களின் விநியோகம் என்பன உள்ளடக்கப்பட வேண்டும். 700 பாடசாலை மாணவர்களுக்கு விழிப்பூட்டலை உருவாக்கும் நிகழ்ச்சி திட்டங்களை தேசிய ஒத்தழைப்புடன் ஏற்பாடு செய்யப்பட்ட விழிப்பூட்டல் நிகழ்ச்சி திட்டத்தில் காலி மாவட்டத்தில் 150 அரச அலுவலர்கள் பங்குபற்றினர்.

4. மொன்றியல் சமவாயத்திற்கான திருத்தங்கள்.
1.இலண்டன் திருத்தம் (1990) 2.கோபன் ஹேகன் திருத்தம் (1992)
3.மொன்றியல் திருத்தம் (1997) 4.பீஜிங் திருத்தம் (1999)
5.கிகாலி திருத்தம் (2016)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலதிக திருத்தங்களின் மூலம் ஓசோன் படையை தேய்வடைய செய்கின்ற பதார்த்தங்களில் இருந்து கைத்தொழில்கள் தவிர்த்து கொள்வதற்காக இந்த பதார்த்தங்கள் பயன் படுத்தப் படுவதுடன் இவை புவியின் காலநிலைக்கு பாதிப்பை ஏற்படுத்தும் பச்சை விட்டுவாயுக்கள் காணப்படுகின்றன.

5. மெதில்புரோமிட பயன்பாட்டை தவிர்த்தக் கொள்வதுடன் பாரிய வெற்றிகளை மேற்கொள்ளல் -

விவசாயத்தில் பரந்த அளவிலான பூச்சிகளுக்கு எதிராக பல வருடங்களாக மிதெய்தல் புதோமைட் பயன்படுத்தப்பட்டு வந்ததுடன் இது ஓசோன் படைக்கு தேய்வினை ஏற்படுத்தும் உயர் செறிவுடையதான ஒரு நச்சுத் தன்மயான பியுமென்ஜிட் வாயுவாகும். அத்தொடு தற்பொழுது மண் மற்றும் களஞ்சியப்படுத்தப்பட்ட உற்பத்திகளிலும் பயன்படுத்தப்படுகின்றது. மேலும் அறுவடையின் பின்னரான பூச்சிகள் மற்றம் சில தாவரங்களின் அறிமுகத்தை தடை செய்வதற்கும் வர்த்தகத்தில் அறிமுகமாகாத நோய்கள் தொடர்பாகவும் பயன்படுத்தப்படுகின்றது.

6. அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் குறைந்தளவிலான ஜிடப்பி குளிர்சாதன பெட்டிகளின் பயன்பாட்டிற்கான தடைகள் -

குளிர்சாதன மற்றும் காற்று சீராக்கி முறைமைகள் தொடர்பான மாற்ற வழி வகைகள் ஊடாக (HEFCS) வாயுக்கள் தற்பொழுது பரந்த அளவில் RC முறைமை மிகப் பொதுவாக பயன்படுத்தப்படுகின்றது.

எனினும் பலதரப்பட்ட மாற்று வழிகளின் வித்தியாசமான தடைகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. தொழிநுட்ப போடடிகள், பாதுகாப்பு விநியோகம் உள்ளடங்கலாக தொழில் முயற்சியின் தன்மை மற்றும் பருமன் முறைமையின் வடிவமைப்பு குளிர்சாதன வகைகள் முதலியன தொடர்பில் அதன் பிரகாரம் மாற்றமடையும்.

7.சர்வதேச நிகழ்வுகள் -

ஐக்கிய நாடுகள் சுற்றாடல் பொருளாதார பிரிவு மற்றும் ஓசோன் செயற்பாட்டுஇணைக்கப்பட்டு மிக முக்கியமான தேசிய ஓசோன் வலயமைப்புக் கூட்டங்கள் காணப்படுகின்றன. இந்த கூட்டமானது முதன் முறையாக அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளின் 147 தேசிய ஓசோன் அலுவலர்கள், ஓசோன் செயலகம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமுல்படுத்தல் முகவரங்கள் மற்றும் கொள்கை விற்பனைகாரர்களை ஒன்றாக இணைத்து இலங்கையை பிரதிநிநித்துவபடுத்தி இந்த கூட்டத்தில் வாயு வள முகாமை மற்றும் தேசிய ஓசோன் அலகின் உதவிப் பணிப்பாளர் திருமதி மொதிகா திலகரட்ன பங்குபற்றினார்.

மேலும் புவி வெப்பமாகுதலை தவிர்ப்பதற்கான விசேட மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு R22 குளிர்ச்சியூட்டும் பொருளால் இயங்கும் குளிர்சாதனம் மற்றும் காற்று சீராக்கும் உபகரணங்கள் இறக்குமதியாளர்கள், கொள்வனவாளர்கள், உரிமையாளர்கள் போன்றோருக்கு விசேட கொள்வனவு செய்வதால் அதன் மூலம் ஏற்படும் அசௌகரியங்களாக காணப்படுகின்ற நஷ்டங்களை குறைப்பதற்காக பல அறிவித்தல்களை மேற்கொள்ளல்.

தேசிய ஓசோன் அலகிற்கான புதிய தலைத்துவமான வாயு, வள முகாமை மற்றும் தேசிய ஓசோன் அலகின் முன்னரான பணிப்பாளர் திரு ஜீ. ஏ. ஜே. கே. குணவர்த்தன அவர்கள் 2018.03.07 ம் திகதியிலிருந்து பொது முகாமையாளராக பெருந் தோட்ட கைத்தொழில்கள் அமைச்சின் தெங்கு பயிர் செய்கை சபைக்கு நியமனம் பெற்றுள்ளார். இலங்கை நிருவாக சேவையின் SLAS சிரேஸ்ட அலுவலர் திரு சுகத்தர்மகிரத்தி வாயு வள முகாமை மறறும் தேசிய ஓசோன் அலகின் புதிய பணிப்பாளராக நியமனம் செய்யப்பட்டு அத்தினத்திலிருந்து அமுலில் இருக்கின்றார்.

2008ம் ஆண்டு முதல் 2014ஆம் ஆண்டுவரை சுற்றாடல் அமைச்சில் பலபதவிகளில் தர்மகிரத்தி பணியாற்றி இருக்கின்றார். அத்தோடு அவர் உள்நாட்டு அறிவுடன் சுற்றாடலில் காணப்படும் அறிவுத் துறையில் அதிக அனுபவத்தை பெற்று இருக்கின்றார். இவர் 2014-2017 ஆண்டுவரை இந்த அமைச்சிலிருந்து வெளியேறி பிறிதொரு பணிக்காக பணியாற்றியதுடன் அவருடைய பணி நிறைவடைந்ததும் அவர் பின்னரும் வருகை தந்துள்ளார்.

மேற்கூறப்பட்ட அமைப்புக்களின் மூலம் ஓசோன் படையானது பூகோள வெப்பநிலையை தவிர்த்து 12 பாகை செல்சியஸ் நிலைக்க பேணுவதற்கு இதுவரை பேணி கொள்வதற்கு இதுவரை காலமும் மேற் கொள்ளப்பட்ட முன்னெடுப்புக்களில் சர்வதேச ரீதியான தனியொரு பாரிய உண்மையை அறிந்த கொள்வதற்காகவும் அதன் வினைத்திறனை அடைந்து கொள்வதற்காகவும் பாரியதொரு முன்னெடுப்பாகவும் இந்த திருத்தங்கள் இருக்கும் என சுற்றாடல் வல்லுநர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

N.M. Asni -11B



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

01.பயம் செயற்திறனைக் குறைக்கும்:

எந்தவொரு விடயத்தைச் சாதிக்க வேண்டுமானாலும் பயம் இருக்கக் கூடாது. தைரியமாக முன்னின்று செயற்படும் போது வெற்றியை இலகுவாக அடைந்து கொள்ளலாம்.

உதாரணமாக "நான் பரீட்சையில் தோல்வி அடைந்து விடுவேனோ?" என்ற பயத்துடன் படிக்க ஆரம்பித்தால் அந்தப்பயம் படிக்கும் திறனைக் குறைத்துவிடும். வெற்றிக்கான பயணம் சவால்கள் நிறைந்ததாகும். இச்சவால்களைச்சமாளிக்க தைரியம் மிக முக்கியமானது. பயத்துடன் பயணித்தால் சவால்களை எதிர்கொள்ள திராணியின்றி அடைய நினைக்கும் இலக்கை இடை வழியில் கைவிட நேரிடும். இவ்வாறு எந்தவொரு விடயமாக இருந்தாலும் அதில் வெற்றி பெற வேண்டுமானால் பயத்துடன் செயற்படக் கூடாது என்பதை பொது விதியாக வைத்தக்கொள்வது வெற்றிக்கான அடிப்படையாகும்.

02. எமது தயார்படுத்தல்/ ஆயத்தம் ஒரு வாய்ப்பைச் சந்திக்கும் போதே அதிஷ்டம் நிகழ்கின்றது.

அதிஷடம் என்பது ஒரு விபத்து அல்ல. விபத்து என்பது எதிர்பாராமல் நடைபெறும் ஒரு செயல். நாம் சந்திக்க விரும்பும் விடயத்தை அடைவதற்கான தயார்படுத்தலை மேற்கொள்ளும் போது அதை அடைவதற்கான ஒரு சந்தர்ப்பமும் வாய்ப்பும் கிடைக்குமாயின் அங்கு அதிஷ்டம் நிகழ்கின்றது.

உதாரணமாக, ஒரு மாணவன் பரீட்சைக்காக நன்றாக படித்தவிட்டு பரீட்சைத்தாளை சந்திக்கின்றான். அங்கே தான் படித்த விடயங்கள் தொடர்பான வினாக்கள் அதிகமாக வந்திருக்குமாயின் அம்மாணவன் அதிஷ்டசாலியாக மாறிவிடுகின்றான். மாறாக எந்தவித தயார்படுத்தலுமின்றி பரீட்சையை எதிர்கொள்ளும் மாணவனுக்கு எல்லா வினாக்களும் சூனியமாகவே இருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலை மட்டம், கோட்ட மட்டம், வலய மட்டம், மாகாணம் மற்றும் தேசியம் எனப் பல்வேறு போட்டி நிகழ்ச்சிகளை மாணவர்கள் சந்திக்கின்றனர். இப்போட்டிகள் யாவும் வாய்ப்புக்களாகும். இவ்வாய்ப்புக்களைப் பயன்படுத்தி வெற்றி பெறுவதற்க தயார்படுத்தல் என்பது மிக இன்றியமையாததாகும்.

எனவே, நாங்களும் அதிஷ்டசாலிகளாக மாற வேண்டுமானால் நிச்சயமாக தயார்படுத்தல், முன்னாயத்தம் என்பவற்றுடன் ஒரு வாய்ப்பைத்தேடிக்கொள்ள வேண்டும்.

03. நல்ல அடைவுகள்,விளைவுகள் பற்றிச்சிந்திப்பது அதை நோக்கிச் செயற்படத்தூண்டும்.

ஒரு காரியத்தைச் செய்ய ஆரம்பிக்கும் போது அக்காரியம் நிறைவடையும் சந்தர்ப்பத்தில் நாம் அடைந்து கொள்ளக்கூடிய பயன்களை அடிக்கடி கற்பனை செய்து பார்க்க வேண்டும். அவ்வாறு செய்யும் போது ஏற்படக்கூடிய சந்தோஷம், நேர் மனப்பாங்கு மேலும் உற்சாகத்துடன் அக்காரியத்தில் ஈடுபடத்தூண்டுகின்றது.

உதாரணமாக, க,பொ,த "சா/த" பரீட்சையில் 9A பெற்றுக்கொண்டால், பெற்றோர், ஆசிரியர்கள், நண்பர்கள், நலன் விரும்பிகள் பாராட்டுவார்கள். பரிசுகள் தருவார்கள். நமது நாமம் பரவலாக பேசப்படும் என சிந்திக்கும் போது குறித்த பரீட்சையில் அதிகூடிய பெறுபேறுகளைப்பெறுவதற்கான எமது முயற்சிகள் தூண்டப்படுகின்றன.

04. திட்டமிடல் இல்லை என்பது தோல்விக்கான திட்டமிடலாகும்

ஒரு காரியம் வெற்றிபெற திட்டமிடல் ஓர் அடிப்படை அம்சமாகும். நாம் திட்டமிடத்தவறினால் அது எமது தோல்விக்கான திட்டமிடலாக மாறிவிடுகிறது.

குறிப்பிட்ட ஒரு பரீட்சையிலோ அல்லது போட்டி நிகழ்ச்சியிலோ வெற்றி பெற வேண்டுமானால் முதலில் திட்டமிடல் அவசியமாகும் பாடங்களை படித்தல், மீட்டல், மாதிரி வினாக்களைச்செய்து பார்த்தல் போன்ற விடயங்களை எப்போது, எவ்வாறு செய்வது என்பதை ஆரம்பத்திலேயே திட்டமிட்டுக் கொள்ள வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திட்டமிடல் இல்லை என்பது தோல்விக்கான திட்டமிடல் என்பதை மறந்துவிட வேண்டும்.

05. வினயமான தேவைகள் வெற்றிக்கு இட்டுச் செல்லும் நாம் அடைய

விரும்பும் விடயம் எமது முக்கியமான தேவையாக மாறவேண்டும். அவ்வாறு மாறினால், அது வெற்றிக்கு வழிவகுக்கும் என்பதே அடிப்படை. எல்லோரும் செய்கிறார்கள் எனவே, நானும் செய்ய வேண்டும் என்று நினைத்துக் கொண்டு ஒரு காரியத்தில் இறங்குவது நமது வெற்றியை தீர்மானிக்காது மாறாக இதை நான் அடைந்தே தீர வேண்டும் என்ற உணர்வுடன் செயற்படும் போது இலகுவாக அடைந்து கொள்ளலாம்.

உலகத்திலேயே மிக வேகமாக ஓடக்கூடிய மிருகமாக சிறுத்தைப் புலி காணப்படுகிறது எனினும் சிறுத்தைப்புலி ஒரு நாளைக்கு 10 இரைகளை லக்காக கொண்டு அடைய முயற்சித்தால் அவற்றில் இரண்டு இரைகளையே அதனால் அடைந்து கொள்ள முடிகிறதாம்.

காரணம் மற்றைய எட்டு மிருகங்களும் சிறுத்தையை விட வேகமாக ஓடித்தப்பிவிடுககிறதாம் எனவே தமது உயிர்களைக்காப்பாற்ற வேண்டும் என்ற வினயமான தேவை தம்மை விட வேகமாக ஓடக்கூடிய சிறுத்தைப்புலியை விட வேகமாக ஓடத்தூண்டுவதாக ஆய்வாளர்கள் முடிவு செய்கின்றனர்.

எனவே எமது தேவைகள் எப்போதும் வினயமானதாக அமையுமாயின் அதுவே வெற்றிக்கு இட்டுச்செல்லும்.

ஆகவே "அடிமேல் அடி அடித்தால் அம்மியும் நகரும்" எனும் விடாமுயற்சிக்கு இணங்க செயற்பட்டு வெற்றி இலக்கை அடைய முடியும்.

Y. **கயானி** - 11C



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பசுமை கணக்கியலின் கொள்கை

நாட்டின் முடிவெடுத்தல் செயன்முறையில் நிலையான அபிவிருத்தியில் சுற்றாடலின் பங்களிப்பின் ஒருகிணைந்த கருவி பசுமை கணக்கியல் எனப்படும். இது சுற்றாடலின் முக்கியமான கையிருப்புக்களில் ஒரு முறையான செயன்முறையாகவும் பாச்சல்கள் அதனுடன் வழக்கமான பொருளாதார கணக்குகளுடன் பொருளாதார நடவடிக்கைகளின் சுற்றாடல் விளைவுகளில் ஒரு விரிவான நடவடிக்கையினை வழங்குதல் இதன் நோக்கமாகும்.

பசுமையான பொருளாதாரத்தை முன்னெடுத்தல் நாட்டின் பொதுவான எதிர்காலம் என்ற வகையில் இலங்கை 2035ம் ஆண்டில் அபிவிருத்தியடைந்த நாடாக அடைய விரும்புகின்றது. இலங்கையில் 2009ல் ஆயுத மோதல் முடிவுக்கு வந்ததில் இருந்து தெரிவித்த வாய்ப்புக்கள் மீளப்பெற அரசினால் பல துறைகளின் அபிவிருத்தி திட்டங்கள் தொடங்கப்பட்டது. ஒரு நடுதர வருமான நாடாக வருதலுக்கு மன்னேற்றத்தை நோக்கிய பாதையில் இது ஒரு முக்கியமான மைல்கல் என கருதப்படுகின்றது. இதேவேளையில், சுற்றாடல் வளங்களின் பற்றாக்குறை அறிகுறிகள் மற்றும் காலநிலை மாற்ற அச்சுறுத்தல் என்பன அனைத்து இடங்களிலும் அதிகரித்துக் காணப்படுகின்றன. பூகோள பொருளாதார முறைமை கிரகத்தின் சூழலியல் எல்லைகளை தொட்டுவிட்டது என பரந்தளவில் நம்பப்படுகின்றது. அபிவிருத்திக்கான பசுமையான பாதைகளைத் தேடி கண்டறிவதில் உள்நோக்கம் அதிகமாக இருந்ததில்லை. மொத்த உள்நாட்டு உற்பத்தி விரைவான வளர்ச்சியை அடைய ஆறு தசாப்தங்களாக முயற்சிகள் மேற்கொள்ளப் படுகின்றன. மனித குலம் தற்பொழுது எதிர்கொள்ளும் சவால்களை சந்திக்க போதுமானதாக அதிகரித்தளவில் காணப்படுவதில்லை.

பசுமை கணக்கில் அபிவிருத்தி பரிந்துரை, பசுமை கணக்கிடல் இன்னும் சிறிது சிறிதாக மாறிவரும் விடயமாகும். 1993ல் அறிமுகப்படுத்தப்பட்ட நிர்வாக கட்டமைப்பில் இருந்து ஆரம்பமானது. மேம்படுத்தப்பட்ட பதிப்புக்கள் 2003 மற்றும் 2012களில் உருவாக்கப்பட்டது. இந்த இலக்கை அடைவதற்கான முதல் படியாக இலங்கையில் பசுமை கணக்கியல் முறைமையை அமைக்க அமைச்சினால் தேசிய ஊக்குவிப்பு குழு 2010ல் நியமிக்கப்பட்டது. முக்கிய பங்குதாரராக முகவர் அடையாளம் காணப்பட்டதுடன் அவர்கள் தேசிய செயற்குழுவுக்கு நியமிக்கப்பட்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துணைக்குழுக்கள் துறைவாரியாக பல நிர்வாக கட்டமைப்புக்களை கலந்துரையாடி தற்போது ஆரம்பித்துள்ளது. சாத்தியவள மதிப்பீடு ஆய்வின் சிபாரிசின் அடிப்படையில் வனவியல் துறை மாதிரி கற்கை நிறைவேற்றப்பட்டது. தேசிய ஊக்குவிப்புக்குழு இந் நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது.

இத்துடன் நாடுகளில் பெற்றுக்கொள்ளப்பட்ட அனுபவங்கள் வாயிலாக குறிப்பாக ஆசியாவில் அபிவிருத்தியடையும் நாடுகளில் சிறந்த நடைமுறைகளை அடையாளம் காண்பதற்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கிறதுடன், தேவையற்ற ஆபத்துக்களை தவிர்க்கக் கூடியதாக உள்ளது. இது தவிர ஐ. நா அமைப்பில் உள்ள நிபுணர்கள் மற்றும் வளங்கள் என்பனவற்றின் அதிகபட்ச ஆதரவை பெறல் சேணாக உள்ளது. எனவே GA அமைப்பை வெற்றிகரமாக அபிவிருத்தி செய்ய தேசிய பங்குதாரர்களின் ஆதரவு மட்டும் அல்லாது பிராந்திய மற்றும் சர்வதேச ஒத்துழைப்பு அத்தியவசியமானதாகும்.

S.Lakshala - 11B



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வளி மாசடைதல்

* எம்மைச் சூழவுள்ள வாயுவைத் தான் நாம் சுவாசிக்கின்றோம். எம்மைச் சூழவுள்ள இந்த வெற்று பிரதேசங்களை வாயுவினால் நிரப்பப்பட்டுள்ளது. காற்று அடிக்கின்றதென அல்லது காற்று வீசுகின்றது என்பது இந்த வாயு அசைகின்றதைத்தான்.

* எமக்கு நீர் மற்றும் உணவு இன்றி சில நாட்கள் இருக்க முடியும் வாயு இல்லாமல் சிறிதளவு நேரமேனும் இருக்க முடியாது. வாயு இல்லை எனில் எமக்கு என்ன நடக்கும். நாங்கள் இறந்த போய் விடுவோம்.

* நாம் சுவாசிக்கும் போது எமது மூக்குதுவாரத்தினூடாக வாயு நுரையீரலினுள் செல்கின்றது. நுரையீரலினுள் வாயுவில் இருக்கின்ற ஒட்சிசன் நுரையீரல் சுவர்களினூடாக குருதியுடன் ஒன்று கலப்பது அவ்வாறு குருதியினூடாக எமது உடல் பூராகவும் செல்கின்றது. எமது உடலிருந்து வெளியாகின்ற CO2 மீள வெளிச்சுவாசிக்கின்ற வாயுவுடன் வெளியேறுகின்றது.

* எம்மைச் சூழ இருக்கின்ற வாயு தூய்மையாக இருக்குமாயின் அதில் இருப்பதான நைட்ரஜன், ஒட்சிசன், காபனீரொட்சைட்டு, செயற்பாடற்ற வாயுக்கள் போன்ற வாயு வகைகள் என எனினும் மனிதர்களினால் மேற்கொள்ளப்படுகின்ற செயற்பாட்டின் காரணமாக நாம் சுவாசிக்கின்ற வாயுவிற்கு பலவகைப்பட்ட நச்சு வகைகள் மற்றும் துகள் வகைகள் சேருகின்றன. இவ்வாறான வாயு அழுக்கடைவதனை நாம் வாயு மாசடைதல் என்று கூறலாம்.

| * அளவு கேற்ற சதவீதம் | வாயு |
|---|---|
| நைட்ரஜன் | 78.08 |
| ஒக்சிஜன் | 20.95 |
| ஆகன் | 0.93 |
| காபனீரொட்சைட்டு | 0.037 |
| நியோன் | .0.0018 |
| ஈலியம் | .0.00052 |
| நீத்தேன் | .0.00014 |
| கிரிப்தோன் | .0.000010 |
| நைட்ரிக் ஒட்சைட் | .0.0005 |
| ஓசோன் | .0.00007 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* வளி மாசடையும் சந்தர்ப்பங்கள் சில வருமாறு.
* தொழிற்சாலையில் இருந்து வெளியேறும் புகைகள் மூலம்
* வாகனத்திலிருந்து வெளியேறும் புகைகள் மூலம்
* சமைப்பதன் மூலம் சமையல் அறையிலிருந்து வெளியேறுகின்ற புகை மூலம்
* குப்பைகளை எரிப்பதன் மூலம்

அதுமட்டுமல்ல நாம் பயன்படுத்துகின்ற சில வாசனைத்திரவியங்கள் மூலமும் நிறப்பூச்சு வகைகளின் காரணமாக அனேகமாக ஸ்பிரே செய்வதன்னூடாக வாயு மாசடைகின்றது எனினும் வாயு மாசடைதல் ஏற்படுவது மனிதர்களின் செயற்பாடுகளினால் மாத்திரமன்று எரி மலைகள் வெடித்தல், காட்டுத்தீ போன்ற இயற்கை காரணமாகவும் வாயு மாசடைதல் ஏற்படுகின்றன.

* அது மட்டுமல்ல மனிதர்கள் புகைப்பதாலும் வளி மாசடைகின்றது மாசடைந்த வாயுக்களை நாம் சுவாசிப்பதனால் பல வகையான நோய்கள் எமக்கு ஏற்படுகின்றன.

Eg. தலைவலி
கண்ணெரிதல்
சுவாச நுரையீரல் இடையூறகள்
இருமல்
வாந்தியெடுத்தல்
இருதய நோய்
மூக்கு வடிதல்
சிறு பிள்ளைகளின் மூளையில் கோளாறுகள்

இன்னும் பல வகையான நோய்கள் மாசடைந்த வளியினால் ஏற்படுகின்றது.

* அடுத்த சந்ததி ஆரோக்கியமாக வாழ்வதற்காக நாம் மாசடைந்த வாயுக்கள் அற்ற புதியதொரு நாட்டைக் கட்டி எழுப்புவோம்.

R.Harini



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர்கள் எதிர்காலத் தலைவர்கள்

குடும்பங்களின் சொத்தான சிறுவர்களைப் பெற்றோரும், மற்றோரும் அன்பாகவும், பண்பாகவும் நடத்தல் அவசியம். எல்லோரதும் மனதைக் கவருபவர்கள் சிறுவர்கள். சிறுவர்கள் சமுதாயம் சிறப்பானதாக அமையின் எமது எதிர்கால சமூகம் சிறப்புறும்.

இன்று எமது சிறார்கள் பலவித பிரச்சினைகளுக்கு ஆளாகி வருவதால் தான் சிறுவர்கள் தினம் என்று ஒரு நாளில் அவர்களின் நலத்தைப் பேண மக்கள் அனைவரையும் விழித்தெழச் செய்கின்றனர். இன்றைய சிறுவர்கள் பிரச்சினை தீர்ப்பதில் பெற்றோர் மிகுந்த கவனங் காட்டுகின்றனர். பாடசாலைகளும், சமய நிறுவனங்களும், அரசும், அரச சார்பற்ற நிறுவனங்களும், வேறு பல வெளிநாட்டு நிறுவனங்களும் சிறுவர் நலனுக்காகத் துரிதமாக ஈடுபடுகின்றன.

அண்மையில் இலங்கையில் யுனிசெப் நிறுவனத்தின் உதவியுடன் ஜனாதிபதி அவர்கள் ஆரபித்து வைக்கப்பட்ட சிறுவருக்கான தேசிய திட்டத்தில் சிறுவரின் கல்வி, சுகாதாரம், விளையாட்டு, குடும்ப சூழல் போன்ற பல வி.டயங்களில் கவனம் செலுத்த வேண்டிய அவசியம் வலியுறத்தப்பட்டு அதற்கான வேலைத் திட்டங்கள் முன் வைக்கப்பட்டுள்ளன. இவை நாடளாவிய ரிதியில் சிறாரின் முன்னேற்றத்திற்கு உதவுவன.

எனினும் சாதாரணமாக மக்கள் தத்தம் சிறார்களில் கண்ணும் கருத்துமாகவே இருக்கின்றனர். பெற்றோர் வீடுகளில் சிறாரை நல்வழிப்படுத்துவதில் கூடிய அக்கறை காட்டுகின்றனர். கல்வி, விளையாட்டு, பொழுதுபோக்கு, இறைசிந்தனை என்பவற்றில் பிள்ளைகளுடன் தாமும் இணைந்தே ஈடுபடுவதைக் காணமுடிகிறது மேலதிக வகுப்புக்கள், கலைப்பயிற்சிகள் எனச் சிறார்களுடனேயே அலைந்து திரிகின்றார்கள் இது சிறுவர் மேல் கொண்ட அதிக அக்கறையையும் வழிநடத்தலையுமே உணர்த்துகின்றது.

ஏனைய சமூகங்களின் வீடுகளில் நடைபெறும் பண்டிகைகள், சமய விழாக்களின் போது பெற்றோர், சகோதர்களுடன் சென்று அலங்கார வேலைகள், சிற்றுண்டிகள் பரிமாறுதல் மூலம் கொண்டாட்டங்களில் கலந்து கொள்ளுகின்றனர். வேற்றுச் சமூகங்களுடன் பழகுவதால் சமூகவிழுமிங்கள் புரிந்துணர்வு, உதவும் மனப்பாங்கு என்பன வளர்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறே பாடசாலைகளிலும், ஆசிரியர் சிறார்களுக்கு நற்பழக்க வழக்கங்களை எடுத்துரைக்கின்றனர். தலைமைத்துவப் பண்புகளையும், சமூக விழுமியங்களையும் மன்றங்கள் மூலமும், விழாக்கள் மூலமும் வளர்கின்றனர். பாடசாலை நிகழும் நிகழ்ச்சிக்கான ஒழுங்குகள், அழைப்பு விடுத்தல், ஆசிரியர்களின் ஒத்துழைப்பை பெறுதல் என்பன யாவுமே மாணவரே தாமே பொறுப்பேற்றுச் செய்ய வழிநடத்தப்படுகின்றனர். மாணவர் தலைவர் ஒன்றியம், சாரணியம், மன்றங்கள் என்பனவும் தலைமைத்துவப் பண்புகளையும் சமூக விழுமியங்களையும் வளர்க்க உதவுகின்றன. சாரணியம் குறிப்பாக எப்போதும் தயாராக இருந்து பிறருக்கு உதவி செய்தலையும், பண்பாக நடத்தலையும், உண்மைபேசுதலையும், இறை சிந்தனையையும் சிறார்கள் மத்தியில் வளர்கின்றது.

இன்றைய சிறார்களின் நலனில் பாடசாலைகளைப் போன்றே சமய நிறுவனங்களுக்கு மிகுந்த அக்கறை கொண்டு உள்ளன. பாடசாலை பாடத் திட்டத்திலேயே மாணவர் வழிபாட்டிடங்களை ஆசிரியருடன் சென்று வழிபாடுகளில் ஈடுபடுதல் அவசியம் எனக் குறிப்பிட்டுள்ளனர். தத்தமது சமயவழி முறைகளுடன் ஏனைய சமய வழிபாடுகளையும் அறியச் செய்வதுடன் மதங்களை மதிக்கும் பண்புகளையும் வளர்க்கின்றன.

சமய மன்றங்கள், விடுமுறை நாட்களில் சமய வகுப்புகளை நடத்துகின்றன. விழாக்களை கொண்டாடுகின்ற ஒழுங்கான ஆடைகளை அணியப் பழக்குகின்றன. பெரியோரை, பெற்றோரை மதிக்கவும் பேணவும் அறிவுறுத்துகின்றன. நூல்கள் வாசிக்கவும் நல்ல கருத்துக்களைப், பாடங்களை, தோத்திரங்களை மனனம் செய்யத் தூண்டுகின்றன. போட்டிகளில் பங்கு கொள்ளச் செய்கின்றன தாமே போதனைகளைச் செய்யவும் தூண்டுகின்றன.

இவ்வாறாக இன்றைய சிறார்களின் நலனின் அக்கறை கொண்ட பெற்றோர்களும், பாடசாலைகளும், சமய நிறுவனங்களும் நற்பழக்க வழக்கங்களைப் புகட்டுவதுடன், சமூக விழுமியப் பண்புகளையும், தலைமைத்துவப் பண்புகளையும் வளர்த்து எதிர்கால சமுதாயம் சிறப்புற வழிவகுக்கின்றன.

S. அனுஜா - 11C



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தற்காலத்தில் அதிகரித்துவரும் காலநிலைசார் சூழலியற் பிரச்சினைகள்

இக்காலக்கட்டங்களில் காலநிலை மூலம் எமது சூழலுக்கு பெரும் பாதிப்புக்கள் ஏற்படுகின்றன. அவற்றுள் முக்கிய மூன்று பிரச்சினைகளாவன.

1. பூகோளம் வெப்பமாதல்
2. ஓசோன் படை வறிதாதல்
3. அமிலமழை பெய்தல்

| சூழலிற் பிரச்சினைகள் | பாதிப்புகள் | குறைக்கும் /தடுக்கக்கூடிய வழிமுறைகள் |
|---|---|---|
| 1. பூகோளம் வெப்பமாதல் | *குடிநீர் மூலங்கள் மாசடைதல் *பயிர் நிலங்கள் சேதமடைதல் *கடல்வாழ் உயிரினங்கள் இறத்தல் *நீர் உவர்தன்மையடைதல் *உயிரினங்களின் நிறமூர்த்தம் அழிவடைதல் | *பச்சை வீட்டு வாயுக்களை வெளிவிடுகின்ற வலு மூலகங்களைக் குறைவாக பயன்படுத்தல் *மீள் காடாக்கம் *கலப்புப் பயிர்ச்செய்கை மற்றும் பல்லினப் பயிர்செய்கைகளை அறிமுகம் செய்தல். |
| 02. ஓசோன் படை வறிதாதல் | *புவிக்கு வருகின்ற கழியூதாக்கதிர்கள் மூலம் கண்ணில் வெண்படலம் தோன்றுதல் *தோலில் புற்றுநோய் ஏற்படுதல். *தாவரங்களின் ஒளித்தொகுப்பு பாதிப்படைதல் | *தொழிற்சாலை, குப்பைகளை எரித்தல் போன்றவற்றில் இருந்து வெளியேறும் புகைகளைக் குறைத்தல். *விஞ்ஞான ஆய்வு கூடங்களில் காணப்படும் நச்சுவாயுக்களை குறைத்தல் |
| 03. அமிலமழை பெய்தல் | *காடுகள், விவசாய பயிர்கள் *அழிவடைதல் *சுண்ணாம்புக்கல் கரைதல் *நீர்வாழ் உயினங்கள் இறத்தல் | *வாகனங்கள் பயன்படுத்துவதை தடைசெய்வதால் NO குறைக்கப்படும் *மீள்காடாக்கம் *நைதரசனீரொட்சைட்டு நீருடன் கலப்பதை தவிர்த்தல் |

S. Abinayapriya 11B



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நட்பிற்குப் பிரிவு உண்டோ

ஏன் என்று தெரியவில்லை . . .
எப்போதும் இனிமையாகவே போகும் என் பயணம்
இப்பொழுது சோகத்தை தருகிறதே . . .
மலர்களைப் போன்று பூத்துக் குலுங்கும்
மாணவர்கள் எனும் அடையாளத்தில்
மறக்க முடியாத நினைவுகளை தந்தது
மனதை வாட்டுவது ஏனோ . . .?

நட்பெனும் பெயரில்
நாட்கள் நன்றாக கடக்க
காதலை கூட மிஞ்சிய நட்பின் பெருமை
என்றும் நிலையானது . . .
நினைவினில் என்றும் இனிமையே தருவது . . .

நேர காலங்கள் நம்மை பிரித்தாலும்
நெஞ்சில் இருக்கும் நினைவுகள்
என்றுமே நம்மை விட்டு பிரியாது
என்றும் பிரியவும் விடுவதில்லை

கைகொடுக்க நண்பர்கள் அருகில் இருந்தால்
நாம் கடலைக் கூட
கண் மூடித்தனமாக கடந்து விடலாம்
அதேபோல் கடலுக்கும் கரை உண்டு
ஆனால் நம் நட்பிற்கு நினைத்தால்
சந்திக்கும் சந்தர்ப்பங்கள் பல உண்டு

எத்தனை வருடம் இல்லாமல் போனாலும்
பார்த்த அடுத்த நொடியிலையே
கட்டி அணைத்து அன்பை வெளிப்படுத்துவது
நட்பின் பண்பாம்
நம்பிக்கையுடன்
நட்பின் நினைவுகளுடன்
என்றும் நான் . . .

M.Sharmika - 11c



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிந்திக்கச் சில துளிகள்

1. உன் கைரேகையை பார்த்து எதிர்காலத்தை நிர்ணயித்து விடாதே.... ஏனென்றால் கையே இல்லாதவனுக்கு கூட எதிர்காலம் உண்டு.

2. ஆண்டவன் சோதிப்பது எல்லோரையும் அல்ல. உன்னைப் போல சாதிக்கத் துடிக்கும் புத்திசாலிகளை மட்டுமே.

3. நமது பிறப்பு ஒரு சம்பவமாக இருக்கலாம். ஆனால் இறப்பு ஒரு சரித்திரமாக இருக்க வேண்டும்.

4. கடினமான செயலின் சரியான பெயர்தான் சாதனை. சாதனையின் தவறான விளக்கம் தான் கடினம்.

5. கடந்து போனதை கணக்கெடுத்துக் கொண்டே இருந்தால் இருப்பதையும் இழந்து விடுவாய்.

6. ஓடும் போது விழுந்து விடுவோம் என்று சிந்திப்பவனை விட விழுந்தாலும் எழுந்து விடுவோம் என்று நினைப்பவன் தான் ஜெயிப்பான்.

7. நீ எந்த அளவுக்கு உயர்ந்தவனாக வேண்டுமென நினைக்கின்றாயோ அந்த அளவுக்கு கடுமையாக சோதனைகளைக் கடந்து செல்ல உன்னைத் தயார் செய்து கொள்.

8. மற்றவனுடன் உன்னை ஒப்பிட்டுப் பார்க்காதே. அவன் வேறு நோக்கத்திற்காக பிறந்திருக்கிறான். நீ வேறு நோக்கத்திற்காக பிறந்திருக்கின்றாய்

9. மீனாக பிறந்து சாவது என்று முடிவெடுத்து விட்டால் பொழுது போக்கிற்காக மீன் பிடிப்பவனின் தூண்டிலில் சிக்காதே. பிழைப்பிற்காக மீன் பிடிப்பவன் வலையில் சிக்கிடு. உன் மரணமும் ஒருவனை வாழ வைக்கட்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10. ஒரு முட்டாள் தன்னை முட்டாள் என்று உணரும் சந்தர்ப்பத்தில் புத்திசாலியாகின்றான். ஆனால் புத்திசாலி தன்னை புத்திசாலி என்று பெருமிதம் கொள்ளும் தருணத்தில் முட்டாளாகின்றான்.

11. பட்டை தீட்டத்தீட்ட தானே தங்கம் உருவாகும். அதே போல் வாழ்க்கையில் இன்னல்கள் கடந்து வந்தால் மட்டும் உன் சாதனை இந்த உலகில் நிஜமாகும்.

12. நீ வெற்றிற்காக போராடும் போது வீண் முயற்சி என்பார்கள். நீ வெற்றி பெற்ற பின் விடா முயற்சி என்பார்கள்.

13. அடுத்தவர் ஆயிரம் வழிகளில் வாழலாம். ஆனால் உனக்கென சிறந்த வழியே நீ தேர்ந்தெடுக்கும் வரையிலும் வெற்றி என்பது உனக்கு கிடைக்காத ஒரு பொக்கிஷமே.

14. ஒரு நல்ல புத்தகம் ஆயிரம் நண்பர்களுக்கு சமம். ஆனால் ஒரு நல்ல நண்பன் ஒரு நூலகத்திற்கு சமனாவான்.

15. நீ யாராக இருந்தாலும் பரவாயில்லை. நீ எண்ணுவது விண்மீனாக இருந்தாலும் உன் உழைப்பால் எண்ணியது வந்துசேரும் நீ நீயாக இரு.

A. Sathika
2019 O/L Batch - 11A



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசானே நீ வாழ்க!

கல்வியெனும் பெருங்கடலில் அறிவெனும்
முத்தெடுக்க முனைகின்ற மாணவர்கள்
மூழ்கித் தத்தளித்து மூச்சடைக்க
அவதியுறும் வேளையிலே கை கொடுத்து
கரை சேர்க்கும் ஆசானே ! நீ வாழ்க !

கடமையை தன் இலட்சியமாய் கனிவான
மனம் கொண்டு கண் மணியாய் எம்மைக் காத்து
கரை சேர்வான் மகன், என்று
காத்திருக்கும் எம் பெற்றோரின் கனவுகளை
நிறைவேற்றும் ஆசானே நீ ! வாழ்க !
வளம் பெறுக

அறிவற்ற சமூதாயம் அறவு பெற
உழைக்கிறீர், அன்பான வார்த்தைகளால்
எம் நெஞ்சைக் கவர்கின்றீர் எதிர்கால சமூதாயம்
நாணித் தலை குனிந்திடாமல்காக்கின்ற ஆசானே !
நீடுழி, நீ வாழ்க ! என்று மனம் வாழ்த்துகின்றேன்.

K.A.F. NAJA - 11A



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* உலகின் மிக நீளமான சுரங்க ரயில் பாதை எந்நாட்டில் திறக்கப்பட்டது? சுவிட்சர்லாந்து

* உலகில் முதல் குளோனிங் வெள்ளாடு சிறப்பான ஆட்டு உரோமத்துடன் எந்நாட்டில் உருவாக்கப்பட்டது? சீனா

* பிப்ரவரி 14. 2017 அன்று கோப்ரா கோல்டு 2017 என்னும் பெயரில் பன்னாட்டு இராணுவ பயிற்சி நடைபெற்ற நாடு? தாய்லாந்து

* சமீபத்தில் 19 வயதிற்கு உட்பட்டோருக்கான ஆசிய கோப்பை கிரிக்கட் போட்டி எங்கு நடைபெற்றது? இலங்கை

* சமீபத்தில் ஆசிய பனிச்சறுக்கு சாம்பியன்சிப் போட்டிகள் எங்கு நடைபெற்றது? ஜப்பான்

* பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கான சர்வதேச அறிவியல் தினம் கொண்டாடப்படும் தினம்? பிப்ரவரி 11

* 2017 இந்திய பனோரமா திரைப்பட விழா எந்த நகரில் இடம் பெற்றுள்ளது? போர்ட் பிளேயர்

* 74 வது கோல்டன் குளோப் விருது வழங்கும் விழா எங்கு நடைபெற்றது? அமெரிக்கா

*"டியான் லியான்" என்ற தொலைத்தொடர்பு செயற்கைக் கோளை ஏவிய நாடு எது? சீனா

*உலகின் மிகப்பெரிய நீர் மற்றும் நிலத்தில் இயங்கும் விமானத்தை தயாரித்துள்ள நாடு எது? சீனா

* சமீபத்தில் சிக்குன்குனியா காய்ச்சலுக்கான தடுப்பூசியை கண்டுபிடித்த நாடு எது? அமெரிக்க

*அமெரிக்காவின் "காசினி" விண்கலம் எந்த கோளை ஆராய்ந்து வருகின்றது? சனி

* சமீபத்தில் கடலுக்கு அடியில்கண்டுபிடிக்கப்பட்ட புதிய கண்டத்தின் பெயர் என்ன? சிலான்டியா

* யுனெஸ்கோ உலக புத்தக தலைநகரம் எங்கு உள்ளது? ஏதென்ஸ்

**ப.லோஸன்** - 11A



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொது அறிவு

* "காமன்மேன்" காட்டுனின் தந்தை யார்?
ஆர். கே. லக்ஸ்மன்

* சமீபத்தில் ஊக்க மருந்து பயன்படுத்தியதிற்காக பதக்கங்கள் பறிக்கப்பட்ட லையா லயின் (liya liyin) எந்த நாட்டைச் சேர்ந்தவர்?
கஜகஸ்தான்

* சமீபத்தில் ஏவுகணைத் திட்டங்களுடன் தொடர்பு வைத்திருந்ததாகக் கூறி பாகிஸ்தானைச் சேர்ந்த 7 நிறுவனங்களுக்க பொருளாதார தடை விதித்த நாடு எது?
அமேரிக்கா

* எரிகல் மற்றும் நட்சத்திரங்களின் பயணங்கள் குறித்து ஆய்வு செய்ய நாசா விண்வெளிக்கு அனுப்பிய தொலை நோக்கியின் பெயர் என்ன?
NEOWISE

* உலகிலேயே அதிகளவு எரிமலைகள் உள்ள நாடு எது?
இந்தோனேசியா

* அபாபீல் (ABABEEL) என்ற BALLISTIC ரக கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணையை வெற்றிகரமாக பரிசோதித்த நாடு எது?
பாகிஸ்தான்

* எந்த நாடு தனது முதல் இராணுவத் தொலைத் தொடர்பு செயற்கை கோளான கிரமேகி2 (KIRAMEKI-02) ஐ வெற்றிக்கரமாக விண்ணில் செலுத்தியுள்ளது? ஜப்பான்

* THE ISLAND OF LOST GIRLS என்ற புத்தகத்தின் ஆசிரியர் யார்?
மஞ்சுளா பத்மநாபன்

* காலநிலை மாற்றத்தை முன்கூட்டியே தெரிவிக்கும் பூக்களின் பெயர் என்ன? பிளேம்ஆப் பாரஸ்ட்

* சமீபத்தில் ஐ. நா வின் புதிய பொதுச் செயலாளராக பொறுப்பேற்ற அன்டோனியோ குட்டெரெஸ் எந்த நாட்டி ன் பிரதமராக பதவி வகித்தார்?
போர்த்துகல்

* சமூக வலைத்தள நிறுவனமான பேஸ் புக் நிறுவனத்தின் ஆசிய பசுபிக் பிராந்திய தலைவர் யார்? டான் நேரி

M. Danusjan - 11A



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றிகள்

இம் மலராக்கத்திற்கு உதவியவர்களுக்கும்,

ஒப்புநோக்கியவர்களுக்கும்,

விழாவில் கலந்து சிறப்பித்த அதிதிகள்,

அதிபர், பிரதி அதிபர்கள், உதவி அதிபர்கள்,

பகுதித் தலைவர்கள், ஆசிரியர்கள், கல்விசாரா

ஊழியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள்,

பிரமுகர்கள், மற்றும் எமது மாணவர்களுக்கும்

மனமார்ந்த நன்றிகளைத்

தெரிவித்துக் கொள்கின்றோம்.


| | |
|---|---|
| சஞ்சிகை | O/L தினமலர் (உரைகல்) |
| வெளியீடு | கமு/கமு உவெஸ்லி உயர்தர பாடசாலை |
| பதிப்பு | நவம்பர் 2019 |
| தகவல் ஒழுங்கமைப்பு | திரு. க. ருத்திரமூர்த்தி (பகுதித்தலைவர்) |
| அச்சுப்பதிப்பு | விக்டரி அச்சகம், கல்முனை. |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விக்டரி அச்சகம். கல்மனை. 0771597347